ISSN: 2582–5518




புதுகை
# வரலாறு நாளிதழ்
WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




செவ்வாய் ❖ பிப்ரவரி. 13, 2024 | சென்னை & புதுக்கோட்டை | 6 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 126 ❖ ரூ.10

### சபாநாயகரின் அநாகரிக செயலால் ஆளுநர் ஆர்.என்.ரவி வெளிநடப்பு: ராஜ்பவன்

# விளக்கம்

## ஆளுநர் ரவி ; சவர்க்கர் வழியில் வந்தவர்களுக்கும், கோட்சே வழியில் வந்தவர்களுக்கும் சற்றும் குறைந்தவர்கள் அல்ல ; சபாநாயகர் அப்பாவு

சென்னை , பிப். 13–

**சட்டப்பேரவையில் சபாநாயகர் அப்பாவு அநாகரிகமான முறையில் ஆளுநரை தாக்கிப் பேசியதன் காரணமாகவே ஆளுநர் ஆர்.என்.ரவி, தமிழக சட்டப்பேரவையில் இருந்து வெளிநடப்பு செய்ததாக ஆளுநர் மாளிகை விளக்கம் அளித்துள்ளது.**



இது தொடர்பாக ஆளுநர் மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையில், 'இன்று [பிப்ரவரி-12] தமிழக சட்டப்பேரவையில் நிகழ்த்தப்பட்ட ஆளுநர் உரை விவகாரத்தில் நிகழ்ந்தவை: ஆளுநரின் உரையின் வரைவு அறிக்கையை, அரசிடமிருந்து கடந்த 9-ம் தேதி ராஜ்பவன் பெற்றது. அதில், உண்மையற்ற பல விஷயங்கள் குறிப்பிடப்பட்டிருந்தன. இதனால், அதனை ஆளுநர் திருப்பி அனுப்பினார். அப்போது, ஆளுநர் உரை விவகாரத்தில் என்னென்ன விஷயங்கள் பின்பற்றப்பட வேண்டும் என்பதற்கான ஆலோசனையை ஆளுநர் வழங்கினார்.

முதலில், தேசிய கீதத்துக்கு உரிய மரியாதை வழங்கப்பட வேண்டும். குறிப்பாக, ஆளுநர் உரையின் தொடக்கத்திலும் முடிவிலும் தேசிய கீதம் இசைக்கப்பட வேண்டும். இது தொடர்பாக, கடந்த காலங்களில் முதல்வர் மற்றும் சபாநாயகருக்கு ஆளுநர் கடிதம் எழுதியிருந்தார்.

இரண்டாவதாக, ஆளுநரின் உரையானது அரசின் சாதனைகள், கொள்கைகள் மற்றும் திட்டங்களைப் பிரதிபலிக்க வேண்டும். சட்டப்பேரவை கூட்டப்பட்டதற்கான காரணங்களை பேரவைக்குத் தெரிவிக்க வேண்டும். தவறான அறிக்கைகளை வெளியிடுவதற்கும், அப்பட்டமான அரசியல் கருத்துகளை வெளியிடுவதற்குமான மன்றமாக இருக்கக் கூடாது.

ஆளுநர் இவ்வாறு ஆலோசனை அளித்திருந்தும், ஆளுநரின் ஆலோசனையை அரசு புறக்கணித்தது. இந்நிலையில், ஆளுநர் இன்று [பிப்ரவரி-12] காலை 10 மணியளவில் அவையில் உரையாற்றினார். அவர் தனது உரையில், சபாநாயகர், முதல்வர், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் தமிழக மக்களுக்கு வாழ்த்து தெரிவித்தார். திருவள்ளுவரின் 738-வது குறளுடன் முதல் பத்தியை படித்தார். அதன்பிறகு ஆளுநர், தவறான தகவல்கள் மற்றும் கூற்றுகளுடன் ஏராளமான பத்திகள் இருந்ததால் அரசியலமைப்பின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு ஆளுநர் உரையை படிக்க தன்னால் இயலவில்லை என்பதை வெளிப்படுத்தினார். மேலும், தமிழக மக்களின் நலனுக்காக இந்த சட்டப்பேரவை அமர்வு பயனுள்ளதாக அமைய வாழ்த்துவதாகவும் கூறி ஆளுநர் தனது உரையை முடித்தார்.

ஆளுநர் உரையின் தமிழாக்கத்தை சபாநாயகர் வாசித்தார். சபாநாயகர் வாசித்து முடிக்கும் வரை ஆளுநர் அவையில் அமர்ந்திருந்தார். சபாநாயகர் உரையை முடித்ததும், திட்டமிட்டபடி தேசிய கீதத்துக்காக ஆளுநர் எழுந்தார். இருப்பினும், சபாநாயகர் திட்டமிட்டபடி நிகழ்ச்சி நிரல்களை பின்பற்றுவதற்குப் பதிலாக, ஆளுநருக்கு எதிராக அவதூறாகப் பேசினார். சபாநாயகர் தனது அநாகரிகமான நடத்தையினால், சபையின் கவுரவத்தையும், அவரது நாற்காலியின் கவுரவத்தையும் குறைத்தார். சபாநாயகர், ஆளுநருக்கு எதிராகக் கடுமையாகத் தாக்கியபோது, ஆளுநர் தமது பதவி மற்றும் சபையின் கண்ணியத்தைக் கருத்தில் கொண்டு சபையை விட்டு வெளியேறினார்" என்று தமிழக ஆளுநர் மாளிகை விளக்கம் அளித்துள்ளது.

முன்னதாக, "சவர்க்கர் வழியில் வந்தவர்களுக்கும், கோட்சே வழியில் வந்தவர்களுக்கும் சற்றும் குறைந்தவர்கள் அல்ல" என்று ஆளுநர் ரவியை குறிப்பிட்டு சட்டப்பேரவை கூட்டத்தொடரில் சபாநாயகர் அப்பாவு பேசினார்.

பின்னர், "ஆளுநருடைய சொந்த கருத்துகள் அனைத்தும் அவைக்குறிப்பில் இருந்து நீக்கப்பட்டுள்ளன. பல மாநிலங்களில் ஆளுநரை சட்டப்பேரவைக்கு அழைப்பதே இல்லை. ஆனால் இங்கே நாம் சட்டத்தை மதிக்கக் கூடியவர்கள்" என்று சபாநாயகர் அப்பாவு தெரிவித்தார்.

இதனிடையே, "தென் மாநில ஆளுநர்களின் திருவிளையாடல் எல்லாம் அந்தந்த மாநில அரசுகளுக்கு எதிராக அமைந்திருக்கின்றன. இதையெல்லாம் இந்திய மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஜனநாயகத்தை கொச்சைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்" என்று தமிழக சட்டத்துறை அமைச்சர் ரகுபதி தெரிவித்துள்ளார்.

# மத்திய அரசில் ஆள்சேர்ப்பு முறை முற்றிலும் வெளிப்படை ஆனதாக மாறிவிட்டது: பிரதமர் மோடி

புதுடெல்லி, பிப். 13–

நேற்று நடைபெற்ற வேலைவாய்ப்பு விழாவில் அரசுத் துறைகள் மற்றும் அமைப்புகளில் புதிதாகப் பணியில் சேர்ந்தவர்களுக்குப் பணி நியமனக் கடிதங்களை வழங்கிய பிரதமர் நரேந்திர மோடி, மத்திய அரசில் ஆள்சேர்ப்பு செயல்முறை முற்றிலும் வெளிப்படையானதாக மாறிவிட்டதாகக் கூறினார்.



பிரதமர் நரேந்திர மோடி நேற்று காணொலி காட்சி மூலம், புதிதாக பணியில் சேர்ந்தவர்களுக்கு ஒரு லட்சத்துக்கும் அதிகமான பணி நியமனக் கடிதங்களை வழங்கினார். புதுதில்லியில் ஒருங்கிணைந்த வளாகமான "கர்மயோகி பவன்" கட்டடத்தின் முதல் கட்ட கட்டுமானப் பணிகளுக்கு அவர் அடிக்கல் நாட்டினார். நிகழ்ச்சியில் பேசிய பிரதமர், "புதிதாகப் பணியமர்த்தப்பட்ட 1 லட்சத்திற்கும் அதிகமானவர்களுக்குப் பணி நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

வேலைவாய்ப்பு பெற்றவர்களுக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் எனது வாழ்த்துகள். அரசில் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்குவதற்கான இயக்கம் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. வேலைவாய்ப்பு அறிவிப்பு மற்றும் நியமனக் கடிதங்களை வழங்குவதற்கு இடையில் நீண்ட கால விரயம், முறைகேடு அதிகரிப்பதற்கு வழிவகுத்தது.

தற்போதைய அரசு முழு செயல்முறையையும் வெளிப்படையானதாக ஆக்கியுள்ளது. அதே நேரத்தில் குறிப்பிட்ட நேரத்திற்குள் ஆள்சேர்ப்பு செயல்முறையையும் நிறைவு செய்துள்ளது. இது ஒவ்வொரு இளைஞருக்கும் தங்கள் திறன்களை வெளிப்படுத்துவதில் சமமான வாய்ப்புகளுக்கு வழிவகுத்துள்ளது. இன்று, ஒவ்வொரு இளைஞரும் கடின உழைப்பு மற்றும் திறன்களால் தங்கள் வேலையை உறுதிப்படுத்த முடியும் என்று நம்புகிறார்கள். நாட்டின் வளர்ச்சியில் இளைஞர்களைப் பங்கெடுப்பாளர்களாக மாற்ற அரசு பாடுபடுகிறது. கடந்த 10 ஆண்டுகளில், முந்தைய அரசுகளை விட தற்போதைய அரசு 1.5 மடங்கு அதிகமாக இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கியுள்ளது.

புதுதில்லியில் ஒருங்கிணைந்த வளாகமான 'கர்மயோகி பவன்' முதல் கட்டத்திற்கு அடிக்கல் நாட்டுவது, திறன் வளர்ப்பை நோக்கிய அரசின் முன்முயற்சியை வலுப்படுத்தும். அரசின் முயற்சிகள் காரணமாக புதிய துறைகள் உருவாக்கப்படுகின்றன. இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்குவதோடு, சுயதொழில் வாய்ப்புகளையும் அரசு உருவாக்கி வருகிறது. பட்ஜெட்டில் 1 கோடி அளவுக்கு மேற்கூரை சூரிய மின் உற்பத்தி அமைப்புகளை நிறுவுவதற்கான திட்டம் லட்சக்கணக்கான புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும்.

சுமார் 1.25 லட்சம் புத்தொழில் நிறுவனங்களைக் கொண்ட உலகின் மூன்றாவது பெரிய புத்தொழில் சூழல் அமைப்பாக இந்தியா உள்ளது. இந்த புத்தொழில் நிறுவனங்களில் பெரும்பாலானவை 2-ம் நிலை அல்லது 3-ம் நிலை நகரங்களைச் சேர்ந்தவை. இந்தப் புத்தொழில் நிறுவனங்கள் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கி வருவதால், சமீபத்திய பட்ஜெட்டில் புத்தொழில் நிறுவனங்களுக்கு வரிச்சலுகை தொடரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆராய்ச்சி மற்றும் புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவிப்பதற்காக பட்ஜெட்டில் ஒரு லட்சம் கோடி நிதி அறிவிக்கப்பட்டுள்ளது.

பயணம் மேற்கொள்ளும்போது சாமானிய மக்களின் முதல் தேர்வாக ரயில்வே உள்ளது. இந்தியாவில் ரயில்வே துறை மிகப்பெரிய மாற்றத்தை சந்தித்து வருகிறது. அடுத்தப் பத்தாண்டுகளில் இத்துறை முழுமையான மாற்றத்தைக் காணும். 2014-ம் ஆண்டுக்குப் பிறகு, ரயில்வேயை நவீனமயமாக்குதல், மேம்படுத்துதல் ஆகியவற்றில் கவனம் செலுத்தி, ஒட்டுமொத்த ரயில் பயண அனுபவத்தையும் புதுப்பித்துக் கொள்ளும் இயக்கம் தொடங்கப்பட்டது.

இந்த ஆண்டு பட்ஜெட் மூலம் வந்தே பாரத் எக்ஸ்பிரசில் இருப்பது போன்ற 40,000 நவீன ரயில் பெட்டிகள் தயாரிக்கப்பட்டு சாதாரண ரயில்களுடன் அவை இணைக்கப்படும். வளர்ச்சியை விரைவுபடுத்த உள்கட்டமைப்பில் முதலீடு அதிகரிக்கப்பட்டுள்ளது. சமீபத்திய பட்ஜெட்டில் உள்கட்டமைப்பில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக 11 லட்சம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. புதிய ரயில், சாலை, விமான நிலையங்கள் மற்றும் நீர்வழித் திட்டங்கள் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கும்.

துணை ராணுவப் படைகளில் பெரும்பாலானவை புதிய நியமனங்களாக உள்ளன. துணை ராணுவப் படைகளுக்கான தேர்வு நடைமுறையில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இந்த ஜனவரி மாதம் முதல் இந்தி, ஆங்கிலம் தவிர 13 இந்திய மொழிகளில் துணை ராணுவப் படைகளுக்கான தேர்வு நடைபெறுகிறது. இதன் மூலம் லட்சக்கணக்கான விண்ணப்பதாரர்களுக்கு சமமான வாய்ப்பு கிடைக்கும்.

எல்லைப் பகுதி மற்றும் தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கான இட ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டுள்ளது. வளர்ச்சியடைந்த பாரதம் திட்டத்தின் பயணத்தில் அரசு ஊழியர்களின் பங்களிப்பு மிக முக்கியமானது. இன்று இணைந்துள்ள 1 லட்சத்துக்கும் அதிகமான அரசு ஊழியர்கள், இந்தப் பயணத்திற்கு புதிய சக்தியையும், வேகத்தையும் அளிப்பார்கள்.

ஒவ்வொரு தினத்தையும் தேச நிர்மாணத்துக்காக அர்ப்பணிக்க வேண்டும் என்று புதிய ஊழியர்களை கேட்டுக் கொள்கிறேன். 800-க்கும் அதிகமான பாடத்திட்டங்களையும், 30 லட்சம் பயனாளர்களையும் கொண்டுள்ள வேலைவாய்ப்புக்கான கர்மயோகி எனும் இணைய தளத்தை அவர்கள் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்" என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

# "ஆளுநர் உரை ஊசிப் போன உணவுப் பண்டம்" எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி விமர்சனம்

சென்னை : பிப். 13–

எந்தவிதமான புதிய மக்கள் நலத் திட்டங்களையும் அறிவிக்காத திமுக அரசு, பசப்பு வார்த்தை ஜாலங்களை ஆளுநர் உரையில் வாரி இறைத்திருக்கின்றது. திமுக அரசு தயாரித்துள்ள ஆளுநர் உரை, உப்பு சப்பில்லாத ஊசிப்போன உணவுப் பண்டம் என்று எதிர்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி விமர்சித்துள்ளார்.



சட்டப்பேரவை வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், "எதிர்வரும் ஆண்டில் ஆளும் அரசு என்னென்ன நலத்திட்டங்களை தமிழக மக்களுக்கு வழங்க உள்ளது என்பதை சுருக்கமாக கூறுவதுதான் மரபு. ஆனால் கடந்த ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் ஆளுநர் உரையில், எந்தவிதமான குறிப்பும் இல்லை. இந்த அரசின் கொள்கைகளை விளக்கும் உரையாக இல்லை. எனவே இந்த விடியா ஆட்சியில் மக்களுக்கு எந்த நன்மையும் கிட்டாது என்பதை நிரூபிக்கும் வகையில்தான் இந்த ஆளுநர் உரை உள்ளது. எந்தவிதமான புதிய மக்கள் நலத் திட்டங்களையும் அறிவிக்காத இந்த அரசு, பசப்பு வார்த்தை ஜாலங்களை வாரி இறைத்திருக்கின்றது.

எனது ஆட்சியில் தொடங்கப்பட்ட பல்வேறு திட்டங்களை ரிப்பன் வெட்டி திறந்துவிட்டு தங்கள் முதுகில் தாங்களே தட்டிக் கொள்வது மட்டுமல்லாமல். ஆளுநரைக் கொண்டு தடவிக் கொடுக்கச் செய்வது வெட்கக் கேடானது. சுருக்கமாக, திமுக அரசு தயாரித்துள்ள ஆளுநர் உரை, உப்பு சப்பில்லாத ஊசிப் போன உணவுப் பண்டம்" என்றார்.

பின்னர் ஆளுநர் 4 நிமிடத்திலேயே உரையை முடித்துக் கொண்டது தொடர்பாக செய்தியாளர்களின் கேள்விக்கு பதிலளித்த இபிஎஸ், "அரசுக்கும் ஆளுநருக்கும் உள்ள பிரச்சினை தொடர்பாக அவர்களிடம் தான் கேட்க வேண்டும். நான் எதிர்க்கட்சி. சபாநாயகர் அப்பாவு பலமுறை சட்டப்பேரவை மரபுகளை கடைபிடிப்பதில்லை. இனியாவது அவற்றை சபாநாயகர் கடைபிடிப்பார் என்று நம்புகிறேன். அவைக்கு என்று ஒரு மரபு இருக்கிறது. சட்டப்பேரவைத் தலைவரே ஒருதலைபட்சமாக நடக்கின்றபோது, என்ன செய்வதென்று மக்கள்தான் முடிவு செய்ய வேண்டும்" என்று கூறினார்.

இந்த ஆண்டுக்கான சட்டப்பேரவையின் முதல் கூட்டத்தொடர் நேற்று கூடிய நிலையில், தமிழக அரசு தயாரித்த உரையை வாசிக்காமல் ஆளுநர் ஆர்.என்.ரவி புறக்கணித்ததால் சலசலப்பு ஏற்பட்டது. அவர் புறக்கணித்த உரையை சபாநாயகர் அப்பாவு வாசித்தார். அவையில் உரை நிகழ்த்தப்பட்ட பின்னர் தேசிய கீதம் இசைக்கப்படுவதற்கு முன்னர் ஆளுநர் ரவி அவையிலிருந்து வெளியேறினார்.

# "இனி உங்களுக்கு பதிலாக மோடியை நான் எதிர்ப்பேன்" நிதிஷை நோக்கி தேஜஸ்வி யாதவ் முழக்கம்

பாட்னா : பிப். 13–

"இனி உங்களுக்கு பதிலாக உங்கள் மருமகனாகிய நான், மோடிக்கு எதிராக கொடியேந்துவேன்" என்று பேசி ராஷ்ட்ரிய ஜனதா தள எம்எல்ஏ தேஜஸ்வி யாதவ் கவனம் ஈர்த்துள்ளார்.



பிஹார் சட்டப்பேரவையில் நேற்று நடந்த நம்பிக்கை வாக்கெடுப்பில் நிதிஷ் குமார் அரசு வெற்றி பெற்றுள்ளது. நிதிஷ்குமார் அரசுக்கு 129 எம்எல்ஏக்கள் ஆதரவாக வாக்களித்துள்ளனர். அதேநேரம், ராஷ்ட்ரிய ஜனதா தளம், காங்கிரஸ் மற்றும் இடது முன்னணி ஆகிய எதிர்க்கட்சிகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் வெளிநடப்பு செய்தனர்.

வாக்கெடுப்புக்கு முன்னதாக, ராஷ்ட்ரிய ஜனதா தள கட்சி எம்எல்ஏவும், பிஹார் முன்னாள் துணை முதல்வருமான தேஜஸ்வி யாதவ் சட்டப்பேரவையில் பேசினார். அவரது பேச்சு பிஹார் அரசியல் களத்தில் கவனம் பெற்றுள்ளது. அவையில் பேசிய தேஜஸ்வி, "நாங்கள் உங்களை ஒரு குடும்ப உறுப்பினராக நினைத்தோம். நீங்கள் முன்பு பாஜகவை எதிர்த்து போர்க்கொடி தூக்கினீர்கள். இப்போது அவர்களைப் புகழ்ந்து கொண்டிருக்கிறீர்கள். இப்போதாவது பிரதமர் மோடி நீங்கள் அணி மாறமாட்டீர்கள் என்று உத்தரவாதம் கொடுக்க இயலுமா எனத் தெரியவில்லை. இருக்கட்டும், நீங்கள் மோடிக்கு எதிராக உயர்த்திய கொடியை இனி உங்கள் மருமகனாகிய நான் ஏந்துவேன்.

ஐக்கிய ஜனதா தள எம்எல்ஏக்களுக்காக நான் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். அவர்கள் இன்னொரு முறை மக்களை சந்திக்கும் போது அவர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டும் என்பதை உணர்ந்திருக்கிறார்களா? அவர்கள் உங்களிடம் "ஏன் நிதிஷ் குமார் மூன்று முறை பதவியேற்றார்" என வினவினால் நீங்கள் என்ன சொல்வீர்கள். அன்று மோடியை விமர்சித்தீர்கள், இன்று புகழ்கிறீர்களே எனவும் கேட்பார்கள். அதற்கு என்ன பதில் சொல்வீர்கள்.

எதுவாக இருப்பினும் நாங்கள் முதல்வர் நிதிஷ் குமாருக்கு உரிய மரியாதையை செலுத்துவோம். ஆனால் ஆளும் ஐக்கிய ஜனதா தளத்தை தொடர்ந்து எதிர்ப்போம். பிஹார் முதல்வராக 9 முறை பதவியேற்றதற்காக நிதிஷ்குமாருக்கு நன்றி" என்று பேசினார்.



# இன்று

**13-2-2024**



சரோஜினி நாயுடு பிறந்த நாள்



சதுர்த்தி விரதம்

...டவ்னி கருப்பராயன் கோயில் – தொழில் சிறப்பாகும்.

சக வருடம் 1945 மாகம் 24

சோபகிருது மாசி 1 | FEB - TUE செவ்வாய் | ஷஃபான் 2 | வளர்பிறை 044 / 322

வளர். சதுர்த்தி 34.57 (மா. 08.34) உத்திரட்டாதி 28.42 (மா. 06.04) தியாஜ் 56.55 அமிர்த 28.42 மேல் சித்த. சதுர்த்தி விரதம். விஷ்ணுபதி புண்ணிய காலம். திருப்பதி ஸ்ரீஏழுமலையப்பன் மைசூர் மண்டபம் எழுந்தருளல். இன்று ஸ்ரீவிநாயக பெருமானை வழிபட நன்று.

| | நல்லநேரம் | கௌரி.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 7.30-8.30 | 10.30-11.30 | 03.00 | 12.00 | 09.00 |
| மாலை | 4.30-5.30 | 7.30-8.30 | 04.30 | 01.30 | 10.30 |

சூலம் : வடக்கு; பரிகாரம் : பால்; கும்ப லக்கனம் இருப்பு நா. 4 வி. 45; சந்திராஷ்டமம் ஆயில்யம் மகம்; கரணம் : 7.30-9; சூரிய உதயம் : 6.35

ஒரு பொய்யை மறைக்க ஒன்பது பொய்

**இராசிபலன்**

மேஷம் - வெற்றி
ரிஷபம் - ஊக்கம்
மிதுனம் - செலவு
கடகம் - வரவு
சிம்மம் - அமைதி
கன்னி - நன்மை
துலாம் - பெருமை
விருச்சி - லாபம்
தனுசு - முயற்சி
மகரம் - போட்டி
கும்பம் - செலவு
மீனம் - பக்தி

## சிந்திப்போம்.... செயல்படுவோம்

எதையும் நீ தேடிப் போகாதே...
உனக்கு தகுதி இருந்தால்
அது உன்னை தேடி வரும்...!!!






## விருதுநகர் மக்களவைத் தொகுதியில் ராம.சீனிவாசனுக்காக பிரச்சாரத்தை தொடங்கிய பாஜக

மதுரை : பிப். 13–

பாஜக வேட்பாளர்கள் அறிவிக்கப்படாத நிலையில், விருதுநகர் மக்களவைத் தொகுதியில் பாஜக வேட்பாளராக ராம.சீனிவாசன் போட்டியிடுவதாக கூறி பாஜகவினர் பிரச்சாரத்தை தொடங்கியுள்ளனர்.

தமிழகத்தில் அனைத்துக் கட்சிகளும் மக்களவைத் தேர்தல் பணிகளை தொடங்கியுள்ளன. திமுக, அதிமுக, பாஜக கூட்டணி முடிவாகாத நிலையில் தேர்தல் தயாரிப்பு, தேர்தல் அலுவலகம் திறப்பு, நிர்வாகிகள் ஆலோசனை என தேர்தல் பணிகளை கட்சிகள் தொடங்கியுள்ளன. திமுக, அதிமுக மற்றும் பிற கட்சிகளை விட பாஜக ஒரு படி முன்னேறி தேர்தல் பிரச்சாரத்தையே தொடங்கிவிட்டது.

விருதுநகர் மக்களவைத் தொகுதியில் தமிழக பாஜக பொதுச் செயலாளர் ராம.சீனிவாசன் பாஜக வேட்பாளராக போட்டியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. இவர் விருதுநகர் தொகுதியில் கடந்த 2 ஆண்டுகளாகவே



பல்வேறு போராட்டங்கள், நிகழ்ச்சிகளை தொகுதியில் நடத்தி வந்துள்ளார். மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் மற்றும் மத்திய அமைச்சர்கள், பாஜக தேசிய நிர்வாகிகளை விருதுநகருக்கு அழைத்து வந்துள்ளார்.

இந்த நிலையில், விருதுநகர் மக்களவைத் தொகுதியின் பாஜக வேட்பாளர் ராம.சீனிவாசன் என்ற பிட் நோட்டீஸ்களை அச்சடித்து பிரச்சாரத்தை தொடங்கியுள்ளனர். திருமங்கலம் பேருந்து நிலையத்தில் பாஜக ஊடகப் பிரிவு மாநில செயலாளர் நாகராஜன் தலைமையில் பெண்கள் பிரச்சாரத்தில் ஈடுபட்டனர். பேருந்துகளில் பயணித்தவர்களுக்கு பிரதமர் மோடியின் பத்தாண்டு சாதனைகள் அச்சிடப்பட்ட துண்டு பிரசுரங்கள் வழங்கினர்.

அதில், 'திருமங்கலத்தில் எய்ம்ஸ் மருத்துவமனை கொண்டு வந்தது, கிராமங்கள் தோறும் ஜல் ஜீவன் திட்டத்தில் குடிநீர் இணைப்புகள் அளித்தது, ரூ.5 லட்சம் மதிப்பில் இலவச மருத்துவ காப்பீடு திட்டம் அளித்தது, பெண்களுக்கு இலவச எரிவாயு இணைப்பு வழங்கியது, வீடு கட்டும் திட்டத்துக்கு மானியமாக ரூ.2.67 லட்சம் அளித்தது, விருதுநகர் மாவட்டத்தில் ரூ.2,000 ஆயிரம் கோடியில் ஜவுளி பூங்கா கொண்டு வந்தது, கிராமச் சாலைகளை நான்கு வழிச் சாலைகளுடன் இணைத்தது, பட்டாசு தொழிலுக்கு பிரச்சினை ஏற்பட்டபோது உச்ச நீதிமன்றம் சென்று தடையை நீக்கியது, தேவேந்திரர் அரசாணை பெற்றுத் தந்தது' உள்ளிட்ட சாதனைகள் அச்சடிப்பட்டிருந்தது.

இதனிடையே, விருதுநகர் தொகுதி முழுவதும் ராம. சீனிவாசனை ஆதரித்து பிரச்சாரம் செய்யப்படும் என ஊடகப் பிரிவு மாநில செயலாளர் நாகராஜன் கூறினார்.

## "பிரதமரின் தலையீடு இல்லாமல் நாங்கள் தாயகம் திரும்பியிருக்க முடியாது"

புதுடெல்லி : பிப். 13–

கத்தார் அரசுடன் இந்திய அரசு மேற்கொண்ட தூதரக பேச்சுவார்த்தை வெற்றி அடைந்ததையடுத்து அங்கு சிறையில் இருந்த இந்திய கடற்படை முன்னாள் வீரர்கள் விடுவிக்கப்பட்டனர். தாயகம் திரும்பிய அவர்கள், "பிரதமரின் நேரடி தலையீடு இல்லையென்றால் எங்களால் இங்கு வந்திருக்க முடியாது" என்று நெகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

இந்திய கடற்படையின் முன்னாள் வீரர்கள் 8 பேர், கத்தாரில் உளவு பார்த்ததாக குற்றம் சாட்டப்பட்டு கடந்த 2022ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் கைது செய்யப்பட்டனர். இதனையடுத்து, அவர்களுக்கு மரணதண்டனைவிதிக்கப்பட்டது. இந்த வழக்கில் மத்திய அரசு நேரடியாக தலையிட்டது. கைது செய்யப்பட்டவர்களின் குடும்பத்தினர் சார்பில் கத்தார் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டது. கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் வழக்கை விசாரித்த மேல்முறையீட்டு நீதிமன்றம், தூக்கு தண்டனையை சிறை தண்டனையாகக் குறைத்தது. தொடர்ந்து அவர்களை இந்தியா அழைத்துவரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்நிலையில், நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை 8 பேரும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

பல மாதங்களுக்குப் பிறகு நேற்று அதிகாலை

**முன்னாள் கடற்படை வீரர்கள் நெகிழ்ச்சி**



இந்திய மண்ணில் வந்திறங்கிய அவர்கள், மிகுந்த உற்சாகத்துடன் 'பாரத் மாதா கி ஜே' கோஷமிட்டு தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். செய்தியாளர்களிடம் பேசிய முன்னாள் கடற்படை வீரர் ஒருவர், "ஒருவழியாக தாயகம் திரும்பியதில் நான் நிம்மதியாகவும், மகிழ்ச்சியாகவும் உணர்கிறேன். பிரதமர் மோடியின் தனிப்பட்ட தலையீடு இல்லாமல் எங்களின் விடுதலை சாத்தியமாகியிருக்காது என்பதால் அவருக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். கத்தார் நாட்டின் எமிர் ஷேக் தமீம் பின் ஹமத் அல் தானிக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்றார்.

மற்றொரு வீரர் பேசும்போது, "பிரதமர் மோடியின் தலையீடு இல்லாமல் நாங்கள் வெளியே வந்திருக்க முடியாது. அவர் எங்களை விடுவிக்க உயர்மட்டத்தில் அயராத முயற்சிகள் மேற்கொள்ளவில்லை என்றால் நாங்கள் உங்கள் முன் நின்றிருக்க மாட்டோம்" என்று கூறினார்.

முன்னதாக, துபாயில் நடைபெற்ற சுற்றுச்சூழல் தொடர்பான COP28 மாநாட்டில் பங்கேற்ற இந்திய பிரதமர் நரேந்திர மோடி, கத்தார் அரசர் ஷேக் தமிம் பின் ஹமாத்தைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். இருதரப்பு உறவை மேம்படுத்துவது குறித்த இந்த பேச்சுவார்த்தை மிகவும் நல்ல முறையில் நடந்தது. இந்தப் பேச்சுவார்த்தையின்போது, கத்தாரில் வாழும் இந்தியர்களின் நலன்களை பாதுகாப்பது குறித்தும் பிரதமர் மோடி எடுத்துரைத்தது குறிப்பிடத்தக்கது.

விடுவிக்கப்பட்ட நபர்களின் விவரம் : கேப்டன் நவ்தேஜ் சிங் கில், கேப்டன் பிரேந்திர குமார் வர்மா, கேப்டன் சவுரவ் வஷிஷ்ட், கேப்டன் அமித் நாக்பால், கமாண்டர் பூர்னேந்து திவாரி, கமாண்டர் சுகுனாகர் பாகலா, கமாண்டர் சஞ்சீவ் குப்தா, மாலுமி ராகேஷ் ஆகியோர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

## அதிமுக முன்னாள் அமைச்சர் ஜெயக்குமாருக்கு எதிரான நில அபகரிப்பு வழக்கை 2 வாரத்துக்கு ஒத்திவைத்தது ஐகோர்ட்

சென்னை : பிப். 13–

அதிமுக முன்னாள் அமைச்சர் ஜெயக்குமாருக்கு எதிரான நில அபகரிப்பு வழக்கை ஐகோர்ட் 2 வாரத்துக்கு ஒத்திவைத்து உத்தரவிட்டுள்ளது.

சென்னை துரைப்பாக்கத்தில் மீன் வலை உற்பத்தி நிறுவனம் அமைந்துள்ள 8 கிரவுண்ட் நில உரிமை தொடர்பாக முன்னாள் அமைச்சர் டி.ஜெயக்குமாரின் மருமகனான நவீன்குமார் என்பவருக்கும், அவரது சகோதரர் மகேஷ் என்பவருக்கும் இடையே பிரச்சனை இருந்து வந்தது. இதில் அடியாட்கள் மூலம் மிரட்டி நிலத்தை அபகரித்து கொண்டதாகவும், கொலை மிரட்டல் விடுத்ததாகவும் ஜெயகுமாருக்கு எதிராக மகேஷ் காவல்நிலையத்தில் புகார் அளித்திருந்தார்.

இந்த புகாரின் அடிப்படையில் ஜெயக்குமார், அவரது மகள் ஜெயபிரியா, மருமகன் நவீன்குமார் ஆகியோர் மீது கொலை மிரட்டல், சதித்திட்டம் உள்ளிட்ட ஆறு பிரிவுகளின் கீழ் சென்னை மத்திய குற்றப்பிரிவு காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்தனர். இது தொடர்பான செய்தி வெளியாகி தனதுநற்பெயரும், நன்மதிப்பும் பாதிக்கப்பட்டுள்ளதால், தன்னை பற்றி அவதூறான கருத்துக்களை வெளியிட்டதற்காக ஒரு கோடி ரூபாய் மான நஷ்ட ஈடாக வழங்கக் கோரியும், தன்னை பற்றி அவதூறு கருத்துக்களை வெளியிட தடை விதிக்க வேண்டும் எனவும் மகேஷுக்கு எதிராக டி.ஜெயக்குமார் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கை ஏற்க கூடாது என மகேஷ் தரப்பிலும் நிராகரிப்பு மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்குகளை விசாரித்த நீதிமன்றம், ஜெயக்குமார் குறித்து அவதூறு கருத்துக்களை தெரிவிக்க மகேஷுக்கு இடைக்கால தடைவிதித்து உத்தரவிட்டிருந்தது. இந்த மனுக்கள் நீதிபதி கே.குமரேஷ்பாபு முன்பு விசாரணைக்கு வந்தபோது,



ஜெயக்குமார் தரப்பில் மூத்த வழக்கறிஞர் அரவிந்த் சுப்ரமணியன் ஆஜராகி, கடந்த 2016ஆம் ஆண்டில் நடந்ததாக கூறப்படும் குற்றச்சாட்டுக்கு ஆறு ஆண்டுகளுக்குப்பிறகு வழக்கு பதியப்பட்டுள்ளதாகவும், இது அரசியல் பழிவாங்கும் நோக்கத்துடன் உள்ளதாகவும் தெரிவித்தார்.

அதனால், மான நஷ்ட ஈடு கோரி தாங்கள் தொடர்ந்த வழக்கை எதிர்த்து மகேஷ் தொடர்ந்த மனுவை அபராதத்துடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என தெரிவித்தார். புகார்தாரரான மகேஷ் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், கடந்த 2016ஆம் ஆண்டு ஜெயக்குமார் அமைச்சராக இருந்த காரணத்தால் அவர் மீது புகார் அளிக்க இயலவில்லை என்பதால், கடந்த ஆண்டு புகார் அளித்ததாக தெரிவித்தார். இரு தரப்பு வாதங்களும் நிறைவடைந்த நிலையில் மகேஷின் நிராகரிப்பு மனு மீதான உத்தரவை நீதிபதி குமரேஷ்பாபு (ஜூன் 7) பிறப்பித்தார்.

அதன்படி ஜெயக்குமார் வழக்கிற்கு எதிரான மகேஷின் நிராகரிப்பு மனுவை தள்ளுபடி செய்து நீதிபதி உத்தரவிட்டார். இதை தொடர்ந்து வழக்கை ரத்து செய்த உயர்நீதிமன்ற உத்தரவுக்கு எதிராக தமிழ்நாடு காவல்துறை தரப்பில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கின் விசாரணை ஐகோர்ட் தலைமை நீதிபதி முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது அரசு தரப்பில் வாதிட்ட வழக்கறிஞர் உரிய ஆவணங்களை தாக்கல் செய்ய 2 வாரம் அவகாசம் வேண்டும் என்று கோரிக்கை வைத்தார். வழக்கை விசாரித்த நீதிபதிகள் அதிமுக முன்னாள் அமைச்சர் ஜெயக்குமாருக்கு எதிரான நில அபகரிப்பு வழக்கை ஐகோர்ட் 2 வாரத்துக்கு ஒத்திவைத்து உத்தரவிட்டார்.

## முன்னாள் டிஜிபி ராஜேஷ் தாஸுக்கு மூன்று ஆண்டு சிறை : தண்டனையை உறுதி செய்தது நீதிமன்றம்

விழுப்புரம் : பிப். 13–

முன்னாள் சிறப்பு டிஜிபி ராஜேஷ்தாஸுக்கு விதிக்கப்பட்ட மூன்று ஆண்டு சிறைத் தண்டனையை விழுப்புரம் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றம் உறுதி செய்துள்ளது.

பெண் எஸ்பிக்கு பாலியல் தொல்லை கொடுத்ததாக தொடரப்பட்ட வழக்கில் கடந்த ஜூன் 16 ம் தேதி முன்னாள் சிறப்பு டிஜிபி ராஜேஷ்தாஸிற்கு 3 ஆண்டுகள் சிறை தண்டனையும், ரூ.20,500 அபராதமும் விதித்து விழுப்புரம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

இதனை எதிர்த்து முன்னாள் சிறப்பு டிஜிபி ராஜேஷ் தாஸ் விழுப்புரம் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் கடந்த ஜூலை மாதம் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்திருந்தார். பலமுறை வாதாட கால



அவகாசம் அளிக்கப்பட்ட நிலையில் அவரது தரப்பில் ஆஜராகி வாதாடவில்லை. அதைதொடர்ந்து நீதிமன்றம் விடுத்த எச்சரிக்கையைத் தொடர்ந்து முன்னாள் சிறப்பு டிஜிபி ராஜேஷ்தாஸ் 5 நாட்கள் ஆஜராகி வாதாடி தனது வாதத்தை நிறைவு செய்தார்.

இந்த வழக்கு பிப் 9 ம் தேதி மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பு வழக்கறிஞர் வைத்தியநாதன் தனது வாதத்தை முன் வைத்தார். இந்த நிலையில், இதன் தீர்ப்பு 12 ம் தேதி வழங்கப்படும் என விழுப்புரம் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றம் அறிவித்திருந்தது. அதன்படி நேற்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

தீர்ப்பை வாசித்த நீதிபதி பூர்ணிமா, 3 ஆண்டு சிறைத்தண்டனையை எதிர்த்து ராஜேஷ் தாஸ் தாக்கல் செய்திருந்த முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்தார். அத்துடன் கீழமை நீதிமன்றமான தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் விதித்த மூன்று ஆண்டு சிறைத் தண்டனை மற்றும் அபராதத்தை உறுதி செய்வதாக தெரிவித்தார். சென்னை உயர்நீதிமன்றத்தில் ராஜேஷ் தாஸ் மேல்முறையீடு செய்வதற்காக அவருக்கு முப்பது நாட்கள் அவகாசம் வழங்குவதாகவும், அதுவரை ராஜேஷ் தாஸுக்கு ஜாமின் வழங்குவதாகவும் நீதிபதி தீர்ப்பில் குறிப்பிட்டார். அதேபோல செங்கல்பட்டு முன்னாள் எஸ்பி கண்ணனுக்கு விதித்த ரூபாய் 500 அபராதத்தையும் நீதிபதி பூர்ணிமா உறுதி செய்து தீர்ப்பளித்தார்.

## 'ரூ. 125 கோடி வசூலித்து மோசடி' 'நியோ மேக்ஸ்' விருதுநகர் பகுதி முகவர் கைது

மதுரை : பிப். 13–

'நியோ மேக்ஸ்' துணை நிறுவனம் பெயரில் ரூ.125 கோடி வரை முதலீடு வசூலித்து மோசடியில் ஈடுபட்டதாக விருதுநகர் பகுதி முகவர் கைது செய்யப்பட்டார்.

'நியோ-மேக்ஸ்' என்ற ரியல் எஸ்டேட் நிறுவனம், பல்வேறு ஊர்களில் கிளைகளை ஏற்படுத்தி, இதன் மூலம் கூடுதல் வட்டி, டெபாசிட்டிற்கு இரட்டிப்புத் தொகை வழங்குவதாக மதுரை உட்பட பல்வேறு ஊர்களில் ஏராளமானோரிடம் முதலீடுகளை பெற்று, மோசடியில் ஈடுபட்டுள்ளனர் என புகார்கள் எழுந்தன. இது தொடர்பாக வழக்கு பதிவு செய்த மதுரை பொருளாதாரக் குற்றத் தடுப்புப் பிரிவு போலீஸார் நிறுவனத்தின் முக்கிய நிர்வாகிகள் மதுரை கமலக் கண்ணன், பாலசுப்பிரமணியன், திருச்சி வீரசக்தி மற்றும்




நிறுவனங்களின் இயக்குநர்கள், முகவர்கள் என, சுமார் 90-க்கும் மேற்பட்டோர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, 18-க்கும் மேற்பட்டோரை பொருளாதாரக் குற்றத் தடுப்புப் பிரிவு சிறப்பு டிஎஸ்பி மணிஷா தலைமையிலான தனிப்படையினர் கைது செய்தனர். மேலும், இவ்வழக்கில் சிக்கியவர்களை தொடர்ந்து தேடுகின்றனர்.

இந்நிலையில், இவ்வழக்கில் 'நியோ- மேக்ஸி'ன் துணை நிறுவனமான குளோமேக்ஸ் என்ற நிறுவனம் மூலம் மதுரை உட்பட பல்வேறு பகுதியைச் சேர்ந்த சுமார் 600 பேரிடம் ரூ.125 கோடிக்கு மேல் வசூலித்த முகவர் விருதுநகரைச் சேர்ந்த தியாகராஜன் (36) என்பவர் தொடர்ந்து தலைமறைவாக இருப்பது தெரிந்தது. அவருக்கு எதிராக 5-க்கும் மேற்பட்ட புகார்கள் வந்த நிலையில், அவர் மீது வழக்கு பதிவு செய்து, தனிப்படையினர் அவரை தேடினர்.

இதனிடையே, தியாகராஜனை விருதுநகர் அருகேவைத்துகைதுசெய்தனர். டிஎஸ்பி மணிஷா கூறுகையில், "பொதுவாக மக்கள் இதுபோன்ற மோசடி நிறுவனங்களை நம்பக்கூடாது. நியோமேக்ஸ் வழக்கில்தொடர்புடையவர்களை தொடர்ந்து கைது செய்கிறோம். தலைமறைவானவர் களை தேடுகிறோம். கூடுதல் வட்டி கொடுப்பதாக அறிவிக்கும் நிதிநிறுவனங்கள், முகவர்கள் மீது எச்சரிக்கையாகவும், விழிப்புணர்வுடனும் மக்கள் இருக்க வேண்டும்" என்றார்.

## ஆளுநர் ஆர்.என்.ரவியின் கடைசி உரை இதுவாகவே இருக்கும் : ஈவிகேஎஸ் இளங்கோவன் ஆவேசம்

சென்னை, பிப்.13–

தமிழ்நாடு ஆளுநருக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் காங்கிரஸ் எம்எல்ஏக்கள் கருப்பு பட்டை அணிந்து நேற்று சட்டப்பேரவைக்கு வருகை தந்துள்ளனர்.

தமிழ்நாடு சட்டப்பேரவையின் நடப்பாண்டின் முதல் கூட்டம் ஆளுநர் ஆர்.என். ரவியின் உரையுடன் நேற்று தொடங்கியுள்ளது. புத்தாண்டின் முதல் கூட்டம் என்பதால் ஆளுநர் ரவி உரையுடன் இந்த கூட்டம் துவங்குயுள்ளது. வருகிற பிப்ரவரி 19ம் தேதி தமிழ்நாடு அரசின் சார்பில் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட உள்ளது. நிதியமைச்சர் தங்கம் தென்னரசு முதல் முறையாக பட்ஜெட்டை தாக்கல் செய்ய உள்ளார்.



இதனிடையே தமிழ்நாடு ஆளுநர் ரவிக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக காங்கிரஸ் எம்எல்ஏக்கள் கருப்பு பட்டை அணிந்து சட்டப்பேரவை கூட்டத்திற்கு வருகை தந்துள்ளனர். மக்களவைத் தேர்தலுக்கு இன்னும் சில வாரங்களே உள்ள நிலையில், ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சிகளுக்கு இந்த கூட்டத்துடன் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாத நிகழ்வுகள் 4 நாட்களுக்கு நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஆளுநர் ஆர்.என்.ரவி, தமிழ்நாடு அரசின் உரையை படிக்காமல் இரண்டு நிமிடத்தில் தனது உரையை முடித்துள்ளார். இது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நிலையில், சபாநாயகர் அப்பாவு ஆளுநர் உரையின் முழு பகுதியையும் வாசித்தார். இந்த விவகாரம் தொடர்பாக சட்டப்பேரவையில் காரசார விவாதம் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனிடையே இது குறித்து கருத்து தெரிவித்துள்ள ஈரோடு கிழக்குத்தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன், இதுவே ஆளுநர் ஆர்.என். ரவியின் கடைசி ஆளுநர் உரையாக இருக்கும் என தெரிவித்துள்ளார்.




கல்வித்துறை மற்றும் தொழிலாளர் துறை மூலமாக அரசு மற்றும் தனியார் பள்ளியில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில் சென்னையில் இயங்கி வரும் "சோகோ பள்ளி" மூலமாக காரைக்கால் மாவட்டத்தில் பன்னிரண்டாம் வகுப்பில் பயிலும் மாணவ மாணவிகளை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு பட்டப்படிப்பு வரை இலவசகல்வி மற்றும் பயிற்சிகள் அளித்து வேலைவாய்ப்பையும் பெற்றுத் தருகிறார்கள். இதன் ஒரு பகுதியாக காரைக்கால் மாவட்டத்தில் நடந்த நேர்முக தேர்வில் 17 மாணவர்கள் தகுதி பெற்ற நிலையில் நேற்று புதுவையில் நடந்த நேர்முகத் தேர்வில் இந்த 17 மாணவர்களில் இரண்டு பேர் தேர்வு செய்யப்பட்டார்கள். இதில் நெடுங்காட்டில் அமைந்துள்ள ஜவஹர்லால் நேரு அரசு மேல்நிலை பள்ளியில் பயிலும் ஒரு மாணவன் மற்றும் ஓ.என்.ஜி,சி. பள்ளியில் பயிலும் ஒரு மாணவன் ஆகிய இருவரும் தேர்வு செய்யப்பட்டார்கள்.

## பிஹார் சட்டப்பேரவையில் நடந்த நம்பிக்கை வாக்கெடுப்பில் நிதிஷ் அரசு வெற்றி

பாட்னா : பிப். 13, பிஹார் சட்டப்பேரவையில் நடந்த நம்பிக்கை வாக்கெடுப்பில் நிதிஷ் குமார் அரசு வெற்றிபெற்றுள்ளது.

நிதிஷ்குமார் அரசுக்கு 129 எம்எல்ஏக்கள் ஆதரவாக வாக்களித்துள்ளனர். அதேநேரம், ராஷ்ட்ரிய ஜனதா தளம், காங்கிரஸ் மற்றும் இடது முன்னணி ஆகிய எதிர்க்கட்சிகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் வெளிநடப்பு செய்தனர். எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு செய்த நிலையில், குரல் வாக்கெடுப்பு மூலம் பெரும்பான்மையை நிரூபித்தது நிதிஷ் குமார் தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசு.

மொத்தம் 243 உறுப்பினர்கள் கொண்ட பிஹார் சட்டப்பேரவையில் ஆளும் பாஜக ஐக்கிய ஜனதா தள கூட்டணிக்கு 128 எம்எல்ஏக்கள் உள்ளனர். எதிர்க்கட்சிகளான ராஷ்ட்ரிய ஜனதா தளம், காங்கிரஸ் மற்றும் இடது முன்னணி அடங்கிய மகாபந்தன் கூட்டணிக்கு 114 உறுப்பினர்கள் இருந்தனர். ஏஐஎம்ஐஎம் கட்சிக்கு ஒரு உறுப்பினர் உள்ளார். இந்த நிலையில் நம்பிக்கை வாக்கெடுப்பில் நிதிஷ்குமார் அரசுக்கு 129 எம்எல்ஏக்கள் ஆதரவாக வாக்களித்தனர்.

நம்பிக்கை வாக்கெடுப்புக்கு முன்னதாக, பிஹார் சட்டப்பேரவை சபாநாயகர் பதவியில் இருந்து ராஷ்ட்ரிய ஜனதா தளத்தைச் சேர்ந்த அவத் பிஹாரி சவுத்ரி நீக்கம் செய்யப்பட்டார். சபாநாயகருக்கு எதிராக பாஜக எம்எல்ஏ நந்த்கிஷோர் யாதவ் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவர 125 எம்எல்ஏக்கள் அதற்கு ஆதரவாகவும், 112 எம்எல்ஏக்கள் எதிர்த்தும் வாக்களித்தனர். தொடர்ந்து சபாநாயகர் பதவியில் அவத் பிஹாரி சவுத்ரி நீக்கம் செய்யப்பட்டார்.



நம்பிக்கை வாக்கெடுப்பின்போது ராஷ்ட்ரிய ஜனதா தள எம்எல்ஏக்கள் சேட்டன் ஆனந்த், நீலம் தேவி, பிரகலாத் யாதவ் ஆகியோர் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் வரிசையில் அமர்ந்ததால் பரபரப்பு ஏற்பட்டது. "வாக்கெடுப்பு முடியும் வரை எம்எல்ஏக்கள் அவரவர் இருக்கைகளில் வந்து அமருங்கள். இல்லையென்றால் உங்கள் வாக்குகள் செல்லுபடியாகாது" என ராஷ்ட்ரிய ஜனதா தள தலைவர் தேஜஸ்வி யாதவ் எச்சரிக்கை விடுத்தார்.

முன்னதாக, சட்டப்பேரவையில் பேசிய முதல்வர் நிதிஷ் குமார், "இதற்கு முன்பு லாலு பிரசாத் மற்றும் அவரது மனைவி ஆட்சியில் பிஹாரில் என்ன நடந்தது என்பது அனைவருக்கும் தெரியும். அவர்களின் ஆட்சியில் யாருக்காவது இரவு நேரத்தில் வெளியே செல்ல தைரியம் இருந்ததால் சொல்லுங்கள் பார்ப்போம். முதலில் சாலை இருந்ததா? சாலை உட்பட எந்த வசதிகளும் ராஷ்ட்ரிய ஜனதா தள ஆட்சியில் இல்லை. வளர்ச்சியை ஏற்படுத்துவதை விடுத்து அவர்கள் பணம் சம்பாதித்துக் கொண்டிருந்தார்கள்.

ஆர்ஜேடி தலைவர்கள் வாக்கு வங்கிக்காக முஸ்லிம்கள் குறித்து பேசுவார்கள். ஆனால் உண்மை என்னவென்றால் அவர்களின் ஆட்சிக் காலத்தில் அதிகபட்ச கலவரங்கள் நடந்தன. ஆர்ஜேடியுடன் கூட்டணி அமைத்தபோது நான் அவர்களுக்கு மரியாதை கொடுத்தேன். ஆனால் அவர்களின் முறைகேடுகள் பற்றி அறிந்தபோது நான் வேதனையடைந்தேன். ஆர்ஜேடி தலைவர்களின் ஊழல் குறித்து விசாரணை நடத்தப்படும்.

இந்தியா கூட்டணி மூலம் நான் அனைவரையும் ஒன்றிணைக்க முயற்சித்தேன். ஆனால் என்ன நடந்தது... ஒன்றும் பலனளிக்கவில்லை. எனவே நான் எனது பழைய கூட்டணிக்கே திரும்பிவிட்டேன். இனி இவர்களை ஒருபோதும் விட்டு செல்லமாட்டேன்" என்று எதிர்க்கட்சிகளை கடுமையாக சாடினார்.

# ஸ்ரீ வலம்புரி கற்பக விநாயகர் ஆலய கும்பாபிஷேக விழா



சென்னை ,பிப்.13-

சென்னை, பட்டுரோடு, பிருங்கிமலை, பாரதியார் நகரில் எழுந்தருளி அருள்பாலித்து வரும் ஸ்ரீ வலம்புரி கற்பக விநாயகர் ஆலய கும்பாபிஷேக விழா வெகு விமர்சையாக நடைபெற்றது.

நிகழும் சோபகிருது வருடம், தை மாதம் மேஷ லக்னத்தில் அனைத்து விமானங்கள், பரிவார மூர்த்திகள், ஸ்ரீ கற்பக விநாயகர் ஆகிய தெய்வங்களுக்கு ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகமும் அதனைத் தொடர்ந்து அபிஷேக அலங்காரமும் தீபாராதனையும் அதனைத் தொடர்ந்து தீர்த்த பிரசாதம் வழங்கும் நிகழ்ச்சியும் சிறப்பு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சியும் நடைபெற்றது.

கும்பாபிஷேக விழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஆலய தலைவர் மற்றும் பரம்பரை தர்மகர்த்தா பி.மலைச்சாமி, செயலாளர் கே.எத்திராஜுலு, பொருளாளர் எம். வேளாங்கண்ணி மற்றும் ஆலய நிர்வாகிகள், கும்பாபிஷேக விழா குழுவினர் சிறப்பாக செய்திருந்தனர்.

# சங்கரன்கோவில் இந்து பாண்டிய வண்ணார் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்ட புதிய சமுதாய நலக்கூடம் திறப்பு விழா



சங்கரன்கோவில் : பிப். 13-

சங்கரன்கோவில் இலவன்குளம் சாலை நேதாஜி நகர் பகுதியில் திருக்குறிப்பு தொண்டர் நாயனார் இந்து பாண்டிய வண்ணார் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்ட சமுதாய நலக்கூடம் ரூ. 15 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு திறப்பு விழா நடைபெற்றது.

விழாவிற்கு சமுதாய தலைவர் ராஜேந்திரன் தலைமை வகித்தார், சங்கரன்கோவில் நகராட்சி சேர்மன் உமா மகேஸ்வரி, திமுக நகர செயலாளர் பிரகாஷ், சமுதாய செயலாளர் சுப்பிரமணியன் முன்னிலை வகித்தனர். இதில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ கலந்துகொண்டு புதிய சமுதாய நலக்கூடத்தை குத்து விளக்கு ஏற்றி திறந்து வைத்தார். இதில் வெங்கடேஷ், கவுன்சிலர் செல்வராஜ், வார்டு மெம்பர் பாலசுப்பிரமணியம், சமுதாய பொருளாளர் மாடசாமி, துணைச் செயலாளர்கள் சண்முகையா, மாரியப்பன், துணை பொருளாளர் குருவராஜ், தண்டல் முருகன், செயற்குழு உறுப்பினர்கள் வேல்சாமி, முருகன், மணி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# ஜெயங்கொண்டத்தில் தேமுதிக கொடியேற்று விழா



அரியலூர்,பிப்.13-

ஜெயங்கொண்டத்தில் தேமுதிக சார்பில் கொடியேற்று விழா நடைபெற்றது.

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் நகர தேமுதிக சார்பில், கொடி நாளை முன்னிட்டு கட்சியின் நகர தேமுதிக செயலாளர் குமார் (எ) சின்னபாண்டு தலைமையில், கொடியேற்று விழா நடைபெற்றது, அதில் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்ற மாவட்ட அவைத்தலைவர் வேல்முருகன், தேமுதிக கொடியேற்றினார்.

உடன் நகர அவைத்தலைவர் செந்தில், நகரப் பொருளாளர் சதீஷ், நகரத் துணைச்செயலாளர் சிவராமன் , கொளஞ்சி, நகரப் பிரதிநிதி சின்னமணி, கேப்டன் மன்ற செயலாளர் வீரமணி, தொண்டரணி செயலாளர் முருகன், நகர மகளிரணி செயலாளர் அஞ்சம்மாள் , நகர இளைஞர் அணி செயலாளர் மாணிக்கம் (எ) குமார்,தொண்டரணி துணைச் செயலாளர் செந்தில்குமார், இளைஞர் அணி துணைச்செயலாளர் வெல்டிங் மணி, சின்னராசா, ராஜா, சங்கர், ராமதாஸ், வினோத், கோபி, காமராஜ், கஜேந்திரன் மற்றும் நகர நிர்வாகிகள், தொண்டர்கள் அனைவரும் இணைந்து கொடியேற்றி, விஜயகாந்த் உருவப்படத்துக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

# சேலம் மாநாட்டு தீர்மான விளக்க உரை பொதுக்கூட்டம்



வாசுதேவநல்லூர் : பிப். 13-

தென்காசி வடக்கு மாவட்டம், வாசுதேவநல்லூர் வடக்கு ஒன்றியம், விஸ்வநாதப்பேரி, இராமநாதபுரம், திருமலாபுரம் ஆகிய மூன்று கிளைகளில் சேலம் மாநில இளைஞரணி மாநாட்டுதீர்மான விளக்க உரை பொதுக்கூட்டம் வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர், ஒன்றிய செயலாளர் பொன். முத்தையாபாண்டியன் தலைமையில், கிளை செயலாளர் மற்றும் கிளை நிவாகிகள் முன்னிலையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கழகத்தின் தலைமை கழக பேச்சாளர் சேலம் சுஜாதா கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள். இக்கூட்டத்தில் மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் மனோகரன், மாநில மருத்துவர் அணி துணைச் செயலாளர் டாக்டர் எஸ். எஸ்.செண்பகவிநாயகம், வாசுதேவநல்லூர் தெற்கு ஒன்றிய செயலாளர் பூசை பாண்டியன், இராயகிரி பேரூர் கழகச் செயலாளர் கே.டி.சி.குருசாமி, சிவகிரி பேரூர் கழகச் செயலாளர் சேது சுப்பிரமணியன், சிவகிரி பேரூராட்சி மன்ற தலைவர் கோமதிசங்கரி சுந்தரவடிவேலு, வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றிய துணை பெருந்தலைவர் சந்திரமோகன், தலைமை கழக பேச்சாளர்கள் இஸ்மாயில், ச.முத்துசாமி, தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கிப்ட்சன் ராஜா, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் விக்ரம் மணிகண்டன், மருத்துவர் அணி அமைப்பாளர் மருத்துவர் மணிகண்டன், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் சதீஷ்குமார், அமைப்பு சாரா ஓட்டுநர் அணி துணை அமைப்பாளர் மாரியப்பன், உதயநிதி ஸ்டாலின் நற்பணி மன்றம் புல்லட் கணேசன்,மாவட்ட பிரதிநிதி மைதீன் கனி, ஒன்றிய கவுன்சிலர்கள் முனியராஜ், விமலா மகேந்திரன், செல்வி ஏசுதாஸ், சரஸ்வதி சமுத்திர பாண்டியன், விஸ்வநாதப்பேரி, ஊராட்சி மன்ற தலைவர் ஜோதி மணிகண்டன், திருமலாபுரம் ஊராட்சி மன்றத் தலைவர் மாப்பிள்ளைத்துரை, கிளைக் கழக செயலாளர்கள் & நிர்வாகிகள் ராமமூர்த்தி, குருநாதன், மகேந்திரன், தங்கம், சமுத்திரக்கனி, விஜயகுமார், இசக்கிமுத்து, பராசக்தி, காளீஸ்வரி, சதீஷ்குமார், ஆண்டாள், ரவிச்சந்திரன், குமார், சித்ராதேவி, முருகன், செல்லத்துரை, மா.சலீமா, திருமலைச்சாமி, மணிகண்டன் ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி ராமராஜ், சமுத்திர பாண்டியன், பால்ராஜ், கணேசன், சுசீலா தேவி சரவணன், கடற்கரை, மாப்பிள்ளைத்துரை, சண்முகத்தாய், பெருமாள், ராஜதுரை, பாக்கியவதி, வாசுதேவநல்லூர் வடக்கு ஒன்றிய நிர்வாகிகள் விக்கி, மணிகண்டன் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டு கூட்டத்தை சிறப்பித்தனர்.



மயிலாடுதுறை மாவட்டத்திற்கு உட்பட்ட பூம்புகார், சீர்காழி, மயிலாடுதுறை ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்கு உட்பட்ட பகுதிகளில் எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் எப்படி வாக்களிப்பது என பொதுமக்களுக்கு செயல்விளக்கம் அளித்து விழிப்புணர்வு ஏற்படுத்த மாவட்ட கலெக்டர் மகாபாரதி உத்தரவிட்டுள்ளார். அதன்படி மயிலாடுதுறை மாவட்டம், பூம்புகார் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கடலி, மேமாத்தூர், அன்னவாசல், இலையாலூர், அரங்கங்குடி,வடகரை உள்ளிட்ட பகுதிகளில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் எப்படி வாக்களிப்பது என பொதுமக்களுக்கு செயல்விளக்கம் அளிக்கப்பட்டது. இதனை முன்னிட்டு மேற்கண்ட பகுதிகளில் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் விழிப்புணர்வு வாகனம் நிறுத்தப்பட்டு, அதில் உள்ள ஒலி ஒளி திரையுடன், மாதிரி மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தின் உதவியுடன் எப்படி வாக்குப்பதிவு செய்வது என்று விளக்கம் அளிக்கப்பட்டது. இதனைக் கேட்டு தெரிந்து கொண்ட பொதுமக்களின் சந்தேகங்களுக்கும் பதில் அளிக்கப்பட்டது. மேலும் தாசில்தார் சரவணன், தேர்தல் துணை தாசில்தார் பாபு ஆகியோர் பொதுமக்களிடையே வாக்கு அளிப்பதன் அவசியம் மற்றும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் வாக்குப்பதிவு செய்வது குறித்து உரிய செயல்விளக்கம் அளித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.



சென்னை கொருக்குப்பேட்டையில் தமிழக வெற்றி கழகம் சார்பாக மகளிர் அணி பொதுக்கூட்டம் வடசென்னை கிழக்கு மாவட்ட தலைவர் ஜி.வேலு தலைமையில் நடைபெற்றது. இதில் சுமார் 100க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டனர். இதில் பேசிய அவர் கட்சியின் அடுத்தகட்ட நடவடிக்கை பற்றியும், கட்சியின் முன்னேற்றத்திற்காக தாங்கள் செய்ய வேண்டிய கடமைகள் குறித்தும் கலந்து ஆலோசித்தனர். இதில் தமிழகத்திற்கு மாற்றம் வேண்டும், விஜயின் ஆட்சி அமைய கடுமையாக உழைப்போம் என்று கூறினார்.உடன் வடசென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் டி.ராஜேஷ், மாவட்ட பொறுப்பாளர் சாலமன், மகளிர் அணி கிழக்கு மாவட்ட தலைவி எஸ். ஜெயமணி மற்றும் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கல்வித்துறை மற்றும் தொழிலாளர் துறை மூலமாக அரசு மற்றும் தனியார் பள்ளியில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில் சென்னையில் இயங்கி வரும் “சோகோ பள்ளி” மூலமாக காரைக்கால் மாவட்டத்தில் பன்னிரண்டாம் வகுப்பில் பயிலும் மாணவ மாணவிகளை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு பட்டப்படிப்பு வரை இலவசகல்வி மற்றும் பயிற்சிகள் அளித்து வேலைவாய்ப்பையும் பெற்றுத் தருகிறார்கள். இதன் ஒரு பகுதியாக காரைக்கால் மாவட்டத்தில் நடந்த நேர்முக தேர்வில் 17 மாணவர்கள் தகுதி பெற்ற நிலையில் நேற்று புதுவையில் நடந்த நேர்முகத் தேர்வில் இந்த 17 மாணவர்களில் இரண்டு பேர் தேர்வு செய்யப்பட்டார்கள். இதில் நெடுங்காட்டில் அமைந்துள்ள ஜவஹர்லால் நேரு அரசு மேல்நிலை பள்ளியில் பயிலும் ஒரு மாணவன் மற்றும் ஓ.என்.ஜி,சி. பள்ளியில் பயிலும் ஒரு மாணவன் ஆகிய இருவரும் தேர்வு செய்யப்பட்டார்கள்.



புதுச்சேரி அரசு காரைக்கால் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் இன்று (11.02.2024) ‘சிந்தனை சிற்பி’ சிங்காரவேலர் நினைவு தினம் அரசு சார்பில் அனுசரிக்கப்பட்டது. ‘ நினைவு தினத்தை முன்னிட்டு காரைக்கால் சிங்காரவேலர் சிலை சதுக்கத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவ சிலைக்கு சட்டமன்ற உறுப்பினர் முன்னாள் அமைச்சர் சந்திர பிரியங்கா மாலை அணிவித்தும் மலர் தூவியும் அஞ்சலி செலுத்தினார். உடன் காரைக்கால் மாவட்ட துணை ஆட்சியர் செந்தில்நாதன், காவல் கண்காணிப்பாளர் சுப்பிரமணியன், காரைக்கால் மாவட்டம் முதன்மை கல்வி அதிகாரி, அரசு துறை அதிகாரிகள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டு அன்னாரது திரு உருவ சிலைக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்கள்.



புதுச்சேரி ஆட்சியராக நேற்று பொறுப்பேற்றுக் கொண்ட குலோத்துங்கன் நேற்று மரியாதை நிமித்தமாக முதலமைச்சர் ரங்கசாமி சந்தித்து வாழ்த்து பெற்றார்.

# அருள்மிகு தர்மராஜா திருக்கோயில் கும்பாபிஷேக விழா



சென்னை ,பிப்.13-

சென்னை, புதுப்பேட்டை, தெற்கு சாலையில் எழுந்தருளி அருள்பாலித்து வரும் அருள்மிகு தர்மராஜா ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் வெகுவிமரிசையாக நடைபெற்றது.

தர்மராஜா திருக்கோயில் எழுந்தருளி அருள்பாலித்து வரும் சீர்மிகுத் திருக்குணங்கள் நிரம்பிய கண்ணபிரானுக்கு அன்னையாய், தன்னை அண்டினோருக்கு ஆதரவளித்து வரும் திரௌபதி அம்மனுக்கு, நிகழும் சோபகிருது வருடம், தை மாதம் கும்ப லக்னத்தில் கும்பாபிஷேகமும் அதனை தொடர்ந்து அம்மனுக்கு அபிஷேக அலங்காரமும் தீபாராதனையும் அதனைத் தொடர்ந்து தீர்த்த பிரசாதம் வழங்கும் நிகழ்ச்சியும் சிறப்பு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சியும் நடைபெற்றது. கும்பாபிஷேக விழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஆலய பரம்பரை அறங்காவலர் எல்.ஜனார்த்தனன் மற்றும் ஆலய அமைப்பாளர், நிர்வாகி ஜெயஸ்ரீ ஜனார்த்தனன் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.

# மேல்மாளிகைப்பட்டு கிராமத்தில் அறிவுசார் நகரம் அமைக்க எதிர்ப்பு தெரிவித்து வீடுகளில் கருப்பு கொடி ஏற்றி போராட்டத்தில் ஈடுபட்டனர்



ஊத்துக்கோட்டை, பிப்13-

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், வடமதுரை, ஏனம்பாக்கம், கல்பட்டு, வெங்கல் உள்ளிட்ட ஊராட்சிகளை சேர்ந்த செங்காத்தாகுளம், எர்ணாகுப்பம், மேல்மாளிகைப்பட்டு உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த சுமார் 1,703 ஏக்கர் பரப்பளவில் அறிவுசார்ந்த நகரம் அமைக்க தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.

எனவே, இதற்காக மேற்கண்ட பகுதிகளில் உள்ள நிலங்களை கையகப்படுத்தும் பணியில் கடந்த ஆறு மாத காலமாக வருவாய் துறையினர் ஈடுபட்டு வருகின்றனர். மூன்று போகம் விளையக்கூடிய விவசாய நிலங்களை கையகப்படுத்தினால் தங்களது வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என விவசாயிகள் தரப்பில் எதிர்ப்பு தெரிவித்தனர்.

எனவே, இத்திட்டத்தை கைவிடக் கோரியும்,வேறு பகுதிக்கு இத்திட்டத்தை மாற்ற கோரியும் விவசாயிகள் மற்றும் பல்வேறு அரசியல் கட்சிகள் தொடர்ந்து போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில், மேல்மாளிகைப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த கிராம மக்கள் நூற்றுக்கணக்கானோர் தங்களதுவீடுகளில் கருப்பு கொடியை ஏற்றி வைத்து தங்களது எதிர்ப்பை தெரிவித்தனர்.

மேலும், இத்திட்டத்தை கண்டித்து கிராமத்தில் கண்டன ஆர்ப்பாட்டம் செய்தனர். மேலும்,இத்திட்டத்தை தமிழக அரசு மறுபரிசீலனை செய்யத் தவறினால் அடுத்த கட்டப்போராட்டத்திற்கு செல்லவும் தயாராக உள்ளதாக கிராம மக்கள் தெரிவித்தனர்.

# அறந்தாங்கியில் தேமுதிக சார்பில் கொடிநாள் நிகழ்ச்சி



அறந்தாங்கி,பிப்.13-

அறந்தாங்கி நகர தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் சார்பில் கொடிநாள் நிகழ்ச்சி தினம் கொண்டாடப்பட்டது

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி வாகைமரம் அருகில் தேமுதிக கொடிநாள் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது, தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் கொடிநாள் நிகழ்ச்சியில் கேப்டன் விஜயகாந்த்-ன் நினைவேந்தல் நிகழ்ச்சியும் நடைபெற்றது

அறந்தாங்கி நகர கழகச் செயலாளர் மணிகாந்த் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நகரக்கழக பொருளாளர் ஆனந்த், நகரகழக அவைத்தலைவர் ஆசை, நகர கழகத்தின் துணைச் செயலாளர்கள் தமிழன், கி.வினோத் சீனிவாசன் மாவட்ட தேமுதிக நிர்வாகிகள் ஆர்.வி.பி பூபதி, பாண்டிமணி மற்றும் ரவீந்திரன், பாலா, அருணாசலம், சுரேஷ், மகேந்திரன், கருப்பையா, பாரதி, கார்த்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# கந்தர்வகோட்டை அருகே பெருச்ச வண்ணியம்பட்டி தொடக்கப்பள்ளியில் டார்வின் பிறந்த தினக் கொண்டாட்டம்



கந்தர்வக்கோட்டை, பிப்.13-

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஒன்றியம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி பெருச்சி வண்ணியம்பட்டியில் சார்லஸ் டார்வின் பிறந்த தினம் கடைபிடிக்கப்பட்டது, இந்நிகழ்விற்கு தலைமை ஆசிரியர் ஜார்ஜ் வில்லியம் தலைமை வகித்தார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட தமிழ்நாடு அறிவியல் இயக்க துளிர் திறனறிவு தேர்வு இணை ஒருங்கிணைப்பாளரும் கந்தர்வகோட்டை தமிழ்நாடு அறிவியல் இயக்க வட்டாரச் செயலாளர் ரகமதுல்லா சார்லஸ் டார்வின் பிறந்த தினம் குறித்து பேசியதாவது, சார்லஸ் ராபர்ட் டார்வின் (1809_1882) ஒரு ஆங்கில இயற்கை விஞ்ஞானி. கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்திப் படித்தவர்.

உயிரின உலகின் பரிணாம வளர்ச்சி பற்றி அதன் வரலாற்று ரீதியான வளர்ச்சி பற்றிய தத்துவத்தைக் கண்டு பிடித்தார், உயிரினங்களின் தோற்றம் நூலில் இயற்கைத் தேர்வு, வாழ்க்கைப் போராட்டத்தில் மாறியவை, அழிந்தவை, நின்று நிலைத்தவை குறித்தும், அதனால் ஏற்பட்ட உயிரினங்களின் பரிணாம வளர்ச்சி குறித்தும் தனது அபூர்வக் கண்டுபிடிப்புகளை டார்வின் எழுதியுள்ளார் என்று பேசினார்.

மேலும் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் நடத்தக்கூடிய துளிர் திறனறிவுத் தேர்வில் 4&5 ம் வகுப்பு மாணவர்கள் கலந்துகொள்ள வேண்டும் எனவும் அறிவுரை வழங்கினார்.



செய்தி- மக்கள் தொடர்பு துறை இயக்குனராக டாக்டர் வைத்தியநாதன் நியமனம். செய்தி மக்கள் தொடர்பு துறை இயக்குனர் மோகன் "முதல்வரின் முகவரி திட்ட சிறப்பு அதிகாரி"யாக பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார். திருச்சி மாநகராட்சி ஆணையராக இருந்த டாக்டர். வைத்தியநாதன் *செய்தி- மக்கள் தொடர்பு துறை இயக்குனராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

# மதுரை மத்திய சிறையில் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம் சார்பில் சிறைவாசிகளுக்கு விளையாட்டு பயிற்சி அளிக்கும் திட்டம் துவக்கம்

மதுரை : பிப். 13-

நாடு முழுவதும் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறைகளில் உள்ள சிறைவாசிகளுக்கு விளையாட்டு பயிற்சிகள் அளிக்கும் வகையில் 'பரிவர்த்தன்' என்ற விளையாட்டுப் பயிற்சி திட்டத்தினை இந்தியன் ஆயில் தலைவர் ஸ்ரீகாந்த் மாதவ் வைத்தியா கடந்த 2021 ஆகஸ்ட் 15 அன்று மும்பையில் துவக்கி வைத்தார்.



இந்த பரிவர்த்தன் திட்டத்தின் கீழ் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம் அந்தந்த மாநில சிறைத் துறையுடன் இணைந்து சிறை கைதிகளின் உடல் மற்றும் மன நலனை மேம்படுத்தும் வகையில் பூப்பந்து, கைப்பந்து, செஸ், டென்னிஸ், கேரம் ஆகியவற்றில் தலைசிறந்த பயிற்சியாளர்கள் மூலம் பயிற்சி அளிக்கப்படுகிறது.

நான்கு வார கால பயிற்சியின் போது சிறைவாசிகளுக்கு விளையாட்டின் அடிப்படைகள் குறித்து பயிற்சி அளிக்கப்படும். அதற்கு தேவையான விளையாட்டு பொருட்கள் மற்றும் கருவிகளை இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனமே வழங்கிவிடும். சிறப்பாக பயிற்சி முடித்த பின் விளையாட்டு போட்டிகளிலும் இவர்கள் பங்கு பெறுவதற்கான வழிவகைகள் செய்யப்பட்டுள்ளது.

பரிவர்த்தன் நிகழ்ச்சியின் ஏழாவது கட்டமாக தமிழகத்தில் மதுரை மத்தியசிறையில் நேற்று இத்திட்டம் துவங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மதுரை சரக சிறைத்துறை டிஐஜி பழனி, மத்திய சிறை கண்காணிப்பாளர் சதீஷ்குமார், இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் தமிழக பிரிவு தலைவர் அண்ணாதுரை மற்றும் மதுரை மண்டல மேலாளர் மகேஷ் ஆகியோர் கலந்துகொண்டனர். இந்நிகழ்ச்சியில் நேரலையில் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் தலைவர் ஸ்ரீகாந்த் மாதவ் வைத்தியா கலந்து கொண்டு துவக்கி வைத்தார்.

# இமாச்சலப் பிரதேசத்தில் வெற்றி துரைசாமியின் உடல் 9 நாட்களுக்குப் பின் மீட்பு

இமாச்சல், பிப். 13-

இமாச்சலப் பிரதேசத்தில் விபத்தில் சிக்கி மாயமான சைதை துரைசாமியின் மகன் வெற்றி துரைசாமியின் உடல் 9 நாட்கள் தேடுதலுக்குப் பின் மீட்கப்பட்டுள்ளதாக தகவல்வெளியாகியுள்ளது.



முன்னாள் சென்னை மேயரும், மனிதநேய அறக்கட்டளை நிறுவனருமான சைதை துரைசாமியின் மகன் வெற்றி துரைசாமி (45). இவர், திருப்பூர் மாவட்டத்தை சேர்ந்த நண்பர் கோபிநாத்துடன் சில நாட்களுக்கு முன்பு இமாச்சலப்பிரதேசத்துக்கு சுற்றுலா சென்றிருந்தார். கடந்த 4-ம் தேதி மாலை கசாங் நளா பகுதியில் தேசிய நெடுஞ்சாலையில் (என்.எச்.5) சென்றபோது, திடீரென கட்டுப்பாட்டை இழந்த கார் நிலை தடுமாறி, சட்லெஜ் ஆற்றில் கவிழ்ந்தது.

இந்த விபத்தில், கார் ஓட்டுநர் தன்ஜின் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். கோபிநாத் படுகாயங்களுடன் சிகிச்சைபெற்று வருகிறார். ஆனால், காரில் பயணித்த வெற்றி துரைசாமி காணாமல் போனார். கடந்த 8 நாட்களாக அவரை தேடும் பணி நடந்துவந்தது. இமாச்சலப் பிரதேச போலீஸார், தேசிய பேரிடர் மீட்புப் படையினர், ஸ்கூபா டைவிங் வீரர்கள் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்டோர் தேடுதல் பணியில் ஈடுபட்டனர்.

இந்த தேடுதல் பணியின் போது, பாறை இடுக்குகளில் சேகரிக்கப்பட்ட ரத்தக்கறை மற்றும் திசுக்களின் அடிப்படையில் டிஎன்ஏ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டன. இந்நிலையில், 9 நாளாக வெற்றி துரைசாமியின் உடல் தேடப்பட்டு வந்த நிலையில், விபத்து நிகழ்ந்த இடத்தில் இருந்து இரண்டு கி.மீட்டர் தொலைவில், ஸ்கூபா டைவிங் வீரர்கள் அவரது உடலைக் கண்டுபிடித்துள்ளதாக தகவல்வெளியாகிஉள்ளது.

மீட்கப்பட்ட வெற்றி துரைசாமியின் உடல் உடற்கூராய்வுக்காகஅருகில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. இந்தத் தகவல் வெளியான நிலையில், வெற்றி துரைசாமியின் தந்தை சைதை துரைசாமி இமாச்சலப் பிரதேசம் செல்வதாகவும் தகவல் வெளியாகி உள்ளது. உடற்கூராய்வுக்குப் பின்னர், வெற்றி துரைசாமியின் உடல் சென்னைக்கு கொண்டு வரப்படும் என்று கூறப்படுகிறது.

# ஆலங்குடி அருகே அடிப்படை வசதி கோரி அரசுப் பள்ளி மாணவர்கள் காத்திருப்பு போராட்டம்

ஆலங்குடி, பிப்.13-

புதுக்கோட்டை மாவட்டம், கீரமங்கலம் அருகேயுள்ள மேற்பனைக்காடு அரசு மேல்நிலைப்பள்ளி மாணவ, மாணவிகள் அடிப்படை வசதி கோரி திங்கள்கிழமை காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். மேற்பனைக்காடு அரசு மேல்நிலைப் பள்ளியில் 400க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் படித்து வருகின்றனர், அப்பள்ளியில் உரிய குடிநீர், கழிப்பறை, மின்வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகளின்றி மாணவ, மாணவிகள் பெரும் சிரமத்திற்கு ஆளாகி வந்துள்ளனர்.



இந்நிலையில், பள்ளியில் அடிப்படை வசதிகள், சுற்றுச்சுவர் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி மாணவ, மாணவிகள் வகுப்புகளை புறக்கணித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். தொடர்ந்து, பள்ளி, ஊராட்சி நிர்வாகத்தினர் உடனடி நடவடிக்கை எடுப்பதாக அளித்த உறுதியின்பேரில் மாணவ, மாணவர்கள் போராட்டத்தை கைவிட்டனர்.

# பிரதமர் மோடிக்கு வாக்குறுதிக்கான பத்தாம் ஆண்டு நினைவு நாள் வாழ்த்துக்கள் : அமைச்சர் மனோ தங்கராஜ்

சென்னை : பிப். 13, கருப்பு பணத்தை ஒழித்து சுவிஸ் வங்கியில் இருந்து கருப்பு பணத்தை கொண்டு வந்து மக்கள் ஒவ்வொருவருக்கும் ரூ.15 லட்சம் வங்கி கணக்கில் செலுத்துவதாக பிரதமர் மோடி வாக்குறுதி அளித்து 10 ஆண்டுகள் நிறைவடைந்ததை நினைவூட்டும் விதமாக பிரதமர் மோடிக்கு வாக்குறுதிக்கான பத்தாம் ஆண்டு நினைவு நாள் வாழ்த்துக்கள் என அமைச்சர் மனோ தங்கராஜ் தனது எக்ஸ் வலைதள பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.



அமைச்சர் மனோ தங்கராஜ் எக்ஸ் வலைதள பதிவில்;

நாட்டில் உள்ள கருப்பு பணத்தை ஒழிப்பதற்கு அதிரடி நடவடிக்கை என்ற பெயரில் முன்னெடுக்கப்பட்ட பணமதிப்பிழப்பிற்கு ஆர்பிஐ செலவு செய்த பணம் 13000 கோடி. ஆனால் முடிவில் 99.3 சதவீதம் பணம் வங்கிகளுக்கே திரும்பி விட்டது. இந்தப் படுதோல்வி முன்னெடுப்பால் இந்தியாவின் மொத்த உற்பத்தி 1.5 சதவீதம் ஆக குறைந்தது. நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் காத்திருப்பு வரிசையில், மருத்துவத்திற்கு செலவிடவும் முடியாமல் உயிர் இழந்தனர். தினசரி கூலியை நம்பி இருந்த கோடிக்கணக்கான நடுத்தர, ஏழை மக்கள் பல வாரங்களுக்கு மேலாக தங்கள் ஊதியங்களை பெற முடியாமல் நடுத்தெருவில் திண்டாடினார்கள்.

எது எப்படி இருந்தாலும், பணமதிப்பிழப்பு நடவடிக்கையின் மூலம் பெரும் நிறுவனங்களின் நன்கொடையை பெற்று இந்தியாவின் முதல் பணக்கார கட்சியாக மாறியதற்கும் (சொத்து மதிப்பு-6046.81 கோடி), கருப்பு பணத்தை ஒழித்து சுவிஸ் வங்கியில் இருந்து கருப்பு பணத்தை கொண்டு வந்து மக்களுக்கு லட்ச லட்சமாக கொடுத்தற்கும் மோடி அவர்களுக்கு இந்த வாக்குறுதிக்கான பத்தாம் ஆண்டு நினைவு நாள் வாழ்த்துக்கள் என கூறியுள்ளார்.

# ஜோதிமணி மீண்டும் போட்டியிட கரூர் காங்கிரஸ் நிர்வாகிகள் எதிர்ப்பு

கரூர் , பிப். 13-

கரூர் தொகுதியில் போட்டியிட எம்.பி. ஜோதிமணிக்கு வாய்ப்பு வழங்கக் கூடாது என அம்மாவட்டத்தில் நடந்த காங்கிரஸ் கட்சி ஆலோசனை கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



கரூர் மாவட்ட காங்கிரஸ் சார்பில் மக்களவைத் தேர்தல் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நேற்று தாந்தோணிமலையில் உள்ள தனியார் மண்டபத்தில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் சி.சேகர் தலைமை வகித்தார். இக்கூட்டத்தில் தற்போதைய, முன்னாள் நிர்வாகிகள் பலர் பேசினர். அவர்கள் அனைவரும் 'கூட்டணியில் கரூர் தொகுதியை காங்கிரஸ் கட்சிக்கு பெற்றுத் தரவேண்டும். தற்போதைய எம்.பி. ஜோதிமணிக்கு மீண்டும் வாய்ப்பு வழங்கக் கூடாது. முன்னாள் மாவட்ட தலைவர் பேங்க் சுப்பிரமணியனுக்கு கரூர் தொகுதியில் போட்டியிட வாய்ப்பு வழங்க வேண்டும்' என வலியுறுத்தினர்.

முன்னாள் மாவட்ட தலைவர் பேங்க் சுப்பிரமணியனிடம் க.பரமத்தி வட்டார துணை தலைவர் விசுவை ஆர். செந்தில் குமார் அவரது ரத்தத்தில் எழுதிய கடிதத்தை வழங்கினார். அதில் 'கரூர் எம்.பி தொகுதியை கூட்டணியில் மீண்டும் காங்கிரஸுக்கு பெற்றுத் தரவேண்டும். எம்.பி ஜோதிமணிக்கு மீண்டும் போட்டியிட வாய்ப்பு வழங்கக் கூடாது. முன்னாள் மாவட்ட தலைவர் பேங்க் சுப்பிரமணியனுக்கு போட்டியிட வாய்ப்பு வழங்க வேண்டும்' என மாநில தலைமைக்கு கடிதம் எழுதியிருந்தார். இக்கடிதம் மாநில தலைமைக்கு அனுப்பி வைக்கப்படும் என முன்னாள் மாவட்ட தலைவர் பேங்க் சுப்பிரமணியன் தெரிவித்தார்.

முன்னாள்மாவட்டதலைவரும், ஏஐசிசி உறுப்பினருமான பேங்க் சுப்பிரமணியன் பேசும்போது, "எம்.பி. ஜோதிமணி சரிவர நடந்து கொள்ளாததாலும், மரியாதை கொடுக்காததாலும் கட்சியில் இருந்து பலர் விலகி விட்டனர். தான் என்ற அகம்பாவத்தில் கட்சியை அழித்துக் கொண்டு இருக்கிறார். ராகுல் காந்தியின் பாதயாத்திரையின் போது பலரிடம் பணம் வசூல் செய்துவிட்டு கட்சியினருக்கு தங்குவதற்குக் கூட இடம் ஏற்பாடு செய்யவில்லை. ராகுல் காந்தி பிரதமராக வரவேண்டும்; அதற்கு அதிக இடங்களில் வெற்றி பெற வேண்டும். அதற்கு ஒற்றுமையாக இருந்து பாடுபடுவோம்" என்றார்.

வரும் மக்களவைத் தேர்தலில் இந்தியா கூட்டணியின் வெற்றிக்கு பாடுபடுவது. இம்மாத இறுதியில் தமிழகம் வரும் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவுக்கு சிறப்பான வரவேற்பு அளிப்பது. கரூர் மக்களவை தொகுதியை மீண்டும் காங்கிரஸுக்கு ஒதுக்கி தொகுதி முழுவதும் நன்கு அறிமுகமான முன்னாள் மாவட்ட தலைவர் பேங்க் கே.சுப்பிரமணியனுக்கு போட்டியிட வாய்ப்பு வழங்க வேண்டும். கரூர் எம்.பி. எஸ். ஜோதிமணி தொகுதியில் சரிவர பணியாற்றாமலும், பொதுமக்கள் மற்றும் சொந்த கட்சியினரிடம் சரியான அணுகுமுறை இல்லாத காரணத்தாலும், கூட்டணி கட்சியினரிடமும் வெறுப்புணர்வை ஏற்படுத்திய காரணத்தால் தொகுதி முழுவதும் அனைவரும் பெரும் அதிருப்தியில் உள்ளனர்.

எனவே, அவருக்கு கரூர் மக்களவைத் தொகுதியில் போட்டியிட இம்முறை வாய்ப்பு வழங்க வேண்டாம் என அகில இந்திய, தமிழக தலைமையை கேட்டுக் கொள்வது. எம்.பி. ஜோதிமணி தமிழக காங்கிரஸ் தலைவர், கட்சி நிர்வாகிகளிடம் மோதல் போக்கை கடைபிடித்து சர்வாதிகாரமாக நடந்துகொள்ளும் போக்கை வன்மையாக கண்டித்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# புதுக்கோட்டை அசோக்நகர் பள்ளியில் ஆண்டு விழா



புதுக்கோட்டை

புதுக்கோட்டை அசோக் நகர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் ஆண்டு விழா நடைபெற்றது. விழாவில் தலைமை ஆசிரியர் நிர்மலா வரவேற்புரையாற்றினார். ஆசிரியர் பழனிச்சாமி விழாவினை ஒருங்கிணைத்தார். புதுக்கோட்டை நகர் மன்ற உறுப்பினர்கள் கவிவேந்தன், பாண்டியன் ஆகியோர் தலைமை வகித்தனர். பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் தேவா பள்ளி மேலாண்மைகுழு தலைவர் பழனியம்மாள் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் முத்துராஜா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பரிசுகளை வழங்கி மாணவர்களைப் பாராட்டினார். மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றது. கலை நிகழ்ச்சிகளை ஆசிரியர்கள் சமீம்பானு, ஜீனத் நிஷா பேகம், அனுபமா, அனுசியா, சத்யா மற்றும் கலைச்செல்வி ஆகியோர் செய்திருந்தனர். நிறைவாக ஆசிரியர் கஸ்தூரி நன்றி கூறினார். விழாவில் பெற்றோர்கள் ஆசிரியர்கள் ஊர் பொதுமக்கள் சத்துணவு பணியாளர்கள் முன்னாள் மாணவர்கள் கல்வியாளர்கள் புரவலர்கள் பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# கட்டுமாவடி யேகோவா நிசி நர்சரி பள்ளியில் மாணவர்களின் அறிவியல் கண்காட்சி

கட்டுமாவடி : பிப். 13-

புதுக்கோட்டை மாவட்டம், கட்டுமாவடி யேகோவா நிசி நர்சரி பள்ளியில் மாணவர்களின் அறிவியல் கண்காட்சி நடைபெற்றது.



நிகழ்ச்சிக்கு யேகோவா நிசி பள்ளி தலைமை ஆசிரியை பானுமதி தலைமை தாங்கினார். சிலட்டூர் அரசு மேல்நிலை பள்ளி பட்டதாரி அறிவியல் ஆசிரியர் வி.கோவிந்தராஜன் மற்றும் அறந்தாங்கி ஆண்டோ பிரவின், கே,ஆர்,புரம் கலாநிதி, கட்டுமாவடி கேடிஎஸ் காந்தி கலந்துகொண்டு மாணவர்களின் அறிவியல் கண்காட்சி பார்வையிட்டு மதிப்புரை வழங்கி மாணவர்களை ஊக்கப்படுத்தினார்கள். பேராவூரணி கலைச்செல்வன் விண்வெளி அறிவியல் செயல்முறை கல்வியினை மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் செயல்முறை மூலம் விளக்கமளித்து பேசினார். அறிவியல் கண்காட்சியை பெற்றோர்கள், அருகிலுள்ள பள்ளி மாணவர்கள் கண்டு மகிழ்ந்தார்கள். முடிவில் யேகோவா நிசி பள்ளி தாளாளர் மேசியா சந்தோஷம் நன்றி கூறினார்.

## கொலையாளி மனநலம் பாதிக்கப்படவில்லை

# மருத்துவர் வந்தனா தாஸ் கொலை வழக்கில் மனநல பரிசோதனை அறிக்கை வெளியீடு

திருவனந்தபுரம் : பிப். 13-

மருத்துவர் வந்தனா தாஸ் கொலை வழக்கில் கொலையாளிக்கு மருத்துவர்கள் மேற்கொண்ட மனநல பரிசோதனை அறிக்கை வெளியாகியுள்ளது.



கடந்த ஆண்டு மே மாதம் கேரளாவின் கொல்லம் கொட்டக்காரா மருத்துவமனையில் பயிற்சி மருத்துவரான வந்தனா தாஸை மருத்துவ பரிசோதனைக்காக போலீசாரால் அழைத்து வரப்பட்ட கைதி சந்தீப் என்பவர் கத்திரிகோலால் குத்திக் கொன்ற சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த வழக்கில் தான் மனநலம் பாதிக்கப்பட்டதாக கூறி சந்தீப் தப்பிக்க முயன்ற நிலையில் அவருக்கு இரண்டு முறை மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டது.

திருவனந்தபுரம் மருத்துவ கல்லூரியில் 10 நாட்கள் அனுமதிக்கப்பட்டு சந்தீப்பிற்கு நடத்தப்பட்ட மருத்துவ பரிசோதனையில் அவர் மனநலம் பாதிக்கப்படவில்லை என மருத்துவர்கள் அறிக்கை வெளியிட்டுள்ளனர். இதனிடையே ஜாமின் கோரி சந்தீப் தாக்கல் செய்த மனுவை கேரளா உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்த நிலையில் இந்த வழக்கில் இருந்து சந்தீப் இனி தப்பிக்க முடியாது என கூறப்படுகிறது. முன்னதாக வழக்கை சிபிஐ-க்கு மாற்ற கோரி வந்தனா தாஸின் தந்தை தாக்கல் செய்த மனுவையும் கேரளா உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது குறிப்பிடத்தக்கது.

# மகாராஷ்டிர முன்னாள் முதல்வர் அசோக் சவான் காங்கிரஸில் இருந்து விலகல்

மும்பை : பிப்.13-

மகாராஷ்டிராவின் முன்னாள் முதல்வர் அசோக் சவான் காங்கிரஸ் கட்சியில் இருந்து விலகியுள்ளார். அவர் பாஜகவில் இணைய உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.



மகாராஷ்டிராவின் முக்கிய காங்கிரஸ் தலைவர்களில் ஒருவராக இருந்தவர் அசோக்சவான். மகாராஷ்டிராவின் முன்னாள் முதல்வர் சங்கர் ராவ் சவானின் மகனான இவர், அம்மாநில அமைச்சராகவும், இரண்டு முறை முதல்வராகவும் பதவி வகித்தவர். காங்கிரஸில் செல்வாக்கு மிக்க தலைவரான அவர், காங்கிரஸ் கட்சியில் இருந்து நேற்று விலகி உள்ளார். அவர் தனது ராஜினாமா கடிதத்தை மகாராஷ்டிர காங்கிரஸ் தலைவர் நானா படோலிக்கு எழுதியுள்ளார்.

சட்டப்பேரவை உறுப்பினராக இருக்கும் அசோக் சவான், மகாராஷ்டிர சபாநாயகர் ராகுல் நர்வேகரை சந்தித்து பேசியுள்ளார். இந்தச் சந்திப்பை நர்வேகர் உறுதி செய்துள்ளார். அசோக்சவான் தொடர்பு கொள்ள முடியாத நிலையில் உள்ளதாகக் கூறப்படுகிறது. இதனிடையே, அசோக் சவான் பாஜகவில் இணைய உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இது குறித்த செய்தியாளர்களின் கேள்விக்கு பதில் அளித்த பாஜக மூத்த தலைவரும், மகாராஷ்டிர துணை முதல்வருமான தேவேந்திர பட்னவிஸ், "எதிர்க்கட்சியைச் சேர்ந்த பலர் பாஜகவில் இணைய விரும்புகின்றனர். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பலர் எங்களோடு தொடர்பில் இருக்கின்றனர். ஏனெனில், அவர்கள் கடும் நெருக்கடியில் இருக்கிறார்கள்" என்றார்.

அசோக் சவானோடு, அவரது ஆதரவு எம்எல்ஏக்களான சுபாஷ் தோட்டி, ஜித்தேஷ் அந்தர்புர்கர், அமர் ராஜூர்கர் ஆகியோரும் காங்கிரஸ் கட்சியில் இருந்து விலகுவார்கள் என தகவல் வெளியாகி உள்ளது. இன்னும் இரண்டு மாதங்களில் மக்களவைத் தேர்தல் வர உள்ள நிலையில், இந்த ஆண்டு அக்டோபருக்குள் மாநில சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், அசோக் சவானின் இந்த விலகல் காங்கிரஸ் கட்சிக்கு மிகப் பெரிய பின்னடைவாகப் பார்க்கப்படுகிறது.

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மிலிந்த் தியோரா சமீபத்தில் காங்கிரஸ் கட்சியில் இருந்து விலகி ஏக்நாத் ஷிண்டே தலைமையிலான சிவ சேனா கட்சியிலும், பாபா சித்திக்கி, அஜித் பவாரின் கட்சியிலும் இணைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.


# கால்நடை, வளர்ப்பு பிராணி வளர்க்க உரிமம் பெற வேண்டும் : மதுரை மாநகராட்சி உத்தரவு

மதுரை : பிப். 13, மதுரை மாநகராட்சியில் மாடு, நாய், பன்றி, குதிரை போன்றவை வளர்க்க ஆண்டுதோறும் கட்டணம் செலுத்தி, உரிமம் பெறுவதோடு சாலைகளில் அவற்றை சுற்றத்திரிய விட்டால் ரூ.2,500 முதல் ரூ.20 ஆயிரம் வரை அபராதம் விதிக்கப்படும் என கால்நடைகள் வளர்ப்போருக்கு மாநகராட்சி உத்தரவிட்டுள்ளது.

மதுரை மாநகராட்சிக்குட்பட்ட சாலைகளில் கால்நடைகள் சுற்றித்திரிவது அதிகரித்துள்ளது. சாலைகளின் குறுக்கே அவை திடீரென்று புகுந்து விடுவதால் தடுமாறும் வாகன ஓட்டிகள், மற்ற வாகனங்கள் மீது மோதி விபத்துக்கு உள்ளாகின்றனர். சென்டர் மீடியம் இடைவெளியில் திடீரென்று புகும் மாடுகள், நாய்கள், பன்றிகளால் இரு சக்கர வாகன ஓட்டிகள் கீழே விழுந்து உயிர் பலியும், மீண்டும் முன்போல் இயங்க முடியாத அளவிற்கு கை, கால்களும் முடங்கும் பரிதாபங்களும் நடக்கிறது.

அதனால், மாநகராட்சி நிர்வாகம், கால்நடைகளை பிடித்து குறைந்தளவு தொகை அபராதம் விதித்துப் பார்த்தனர். அப்படியிருந்தும், கால்நடைகளை சாலைகளில் சுற்றித்திரியும் போக்கும் குறையவில்லை. அதனால், தற்போது அபராத தொகையை உயர்த்தியும், தொடர்ந்து சுற்றித்திரிய விட்டால் பொது ஏலம்விடவும், இனி வீடுகளில் கால்நடைகளை வளர்க்க வேண்டுமென்றால், மாநகராட்சியில் முறைப்படி உரிமைத் தொகை செலுத்தி அனுமதி பெற வேண்டும் என நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மாநகராட்சி அதிகாரிகள் கூறியது: "கால்நடைகளால் விபத்துகள் ஏற்படுவதை தடுக்க, மாடு, குதிரை, பன்றி போன்றவை சாலைகளில் சுற்றித்திரிந்தால் ஸ்பாட் பைன் அபராதம் ரூ.3,000 அபராதம் விதிக்கப்படும். கன்று, கழுதை என்றால் ஸ்பாட் பைன் ரூ.1,500 அபராதம் விதிக்கப்படும். அதுவே உரிமையாளர் யார் என்று தெரியாமல் முதல் முறையாக சுற்றித்திரிந்து பிடிபடும் மாடு, குதிரை, பன்றிகள் மாநகராட்சி ஊழியர்களால் பறிமுதல் செய்து, மாநகராட்சி காப்பகத்தில் பராமரிக்கப்பட்டால் அதற்கு முன் அபராதம் முன்பு ரூ.1,500 இருந்தது.



தற்போது அந்த அபராதம் ரூ.2,500 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இரண்டாம் முறை சாலைகளில் மாடு, குதிரை சுற்றித்திரிந்தால் உரிமையாளர்களுக்கு ரூ.10 ஆயிரம் அபராதம் விதிக்கப்படும். இரண்டாம் முறை கன்று, கழுதையை அவிழ்த்துவிட்டால் அதற்கு ரூ.5 ஆயிரம் அபராதம் விதிக்கப்படும். இரண்டு முறைக்கு மேல் சாலைகளில் சுற்றித்திரித்து 5 நாட்களுக்கு உரிமையாளர்களால் உரிமைக் கோரப்படாத மாடு, குதிரை, பன்றிகளுக்கு அபராதத் தொகை ரூ.20 ஆயிரம் விதிக்கப்பட்டு, மாநகராட்சி ஆணையாளரால் பொது ஏலம் விடப்படும்.

இரண்டு முறைக்கு மேல் அல்லது 5 நாட்களுக்கு உரிமை கோரப்படாத கன்று, கழுதைக்கு ரூ.10 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டு மாநகராட்சி ஆணையாளரால் பொது ஏலம் விடப்படும். பிடிக்கப்படும் கால்நடைகள் மாநகராட்சி கால்நடை காப்பகத்தில் பராமரிக்கப்படும் கால்நடைகளுக்கு பராமரிப்பு தொகையான நாள் ஒன்றிற்கு ரூ.300 வசூல் செய்யப்படும். பிடிக்கப்படும் கால்நடைகள், மாநகர விலங்கியல் நல அலுவலர் மேற்பார்வையில் பராமரிக்கப்படும். கால்நடைகளுக்கு தேவையான உணவு மற்றும் தண்ணீர் முறையாக வழங்கப்படும்.

கால்நடை உரிமையாளர்களுக்கு அடையாள அட்டை நகல் மற்றும் உறுமொழி (ரூ.10) பத்திரம் வழங்கி கால்நடைகளை திரும்ப பெற்றுக் கொள்ளலாம். மாநகராட்சி ஊழியர்கள், கால்நடைகளை பிடிக்கும் போது கால்நடை உரிமையாளர்கள் அல்லது பொதுமக்கள் இடையூறு ஏற்படுத்தி பணி செய்ய விடாமல் தடுத்தால் மாநகராட்சி நகர் நல அலுவலரால் போலீஸில் புகார் செய்து சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். கால்நடைகளை வளர்க்க உரிமையாளர்கள் ஆண்டுதோறும் மாநகராட்சியில் உரிமம் பெற வேண்டும்.

மாடுகளுக்கு ரூ.100, கன்று ரூ.50, குதிரை ரூ.150, கழுதை ரூ.150, நாய்கள் ரூ.100, பன்றி ரூ.100 உரிமம் தொகை செலுத்தி அதனை வளர்க்கலாம். உரிமம் பெறாத கால்நடைகளை வளர்த்தால் நடவடிக்கை எடுக்கப்படும். கால்நடைகளை வளர்க்க குடியிருப்பு பகுதிகளில் தொழுவம் அமைக்கக் கூடாது. பொது இடங்களில் வைத்து பராமரிக்கக் கூடாது. கால்நடைகள் வெளியேற்றும் திடக் கிழவுகளை சொந்த வாகனம் அமைத்து அப்புறப்படுத்த வேண்டும், சாலைகளில் மட்டுமில்லாது தெருக்களில் அவிழ்த்துவிடப்படும் மாடு, குதிரை, பன்றி, கன்று, கழுதைகளுக்கு அபராதம் உண்டு. அவை ரூ.1,500 முதல் ரூ.5 ஆயிரம் விதிக்கப்படும்" என்றனர்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

வரலாறு விளையாட்டு

# சென்னை ஓபன் டென்னிஸ்

## இந்திய வீரர் சுமித் நாகல் 'சாம்பியன்'



**சென்னை : பிப். 13,**

**நேற்று வெளியான புதிய தரவரிசை பட்டியலில் சுமித் நாகல் முதல் முறையாக டாப்-100 இடத்திற்குள் நுழைந்தார்.**

சென்னை ஓபன் சேலஞ்சர் சர்வதேச டென்னிஸ் போட்டி நுங்கம்பாக்கத்தில் உள்ள எஸ்.டி.ஏ.டி. ஸ்டேடியத்தில் நடந்தது. நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அரங்கேறிய ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் தரவரிசையில் 121-வது இடத்தில் உள்ள சுமித் நாகல் (இந்தியா), 114-ம் நிலை வீரரான லுகா நார்டியை (இத்தாலி) எதிர்கொண்டார்.

இதில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய சுமித் நாகல் 6-1, 6-4 என்ற நேர் செட்டில் நார்டியை தோற்கடித்து சாம்பியன் கோப்பையை சொந்தமாக்கினார். ஆட்டம் 1 மணி 40 நிமிடங்கள் நடந்தது. அவருக்கு ரூ.15 லட்சம் பரிசுடன் 100 தரவரிசை புள்ளிகளும் கிடைத்தது. இந்த தொடரில் ஒரு செட்டை கூட இழக்காமல் அசத்திய சுமித் நாகலுக்கு இது 5-வது சேலஞ்சர் கோப்பையாகும்.

இந்த வெற்றியின் மூலம் நேற்று வெளியான புதிய தரவரிசை பட்டியலில் சுமித் நாகல் முதல் முறையாக டாப்-100 இடத்திற்குள் நுழைந்தார். அவர் 98-வது இடத்தை பிடிக்கிறார். 2019-ம் ஆண்டு பிரஜ்னேஷ் குணேசுவரனுக்கு பிறகு டாப்-100க்குள் வரும் முதல் இந்திய வீரர் நாகல் ஆவார்.

அடுத்ததாக பெங்களூரு ஓபன் சேலஞ்சர் டென்னிஸ் போட்டி பெங்களூருவில் நேற்று தொடங்கியது. சென்னை ஓபனில் ஆடிய சுமித் நாகல், லுகா நார்டி, ராம்குமார், சகெத் மைனெனி, பிரஜ்வால் தேவ் உள்ளிட்டோர் இந்த போட்டியிலும் களம் காணுகிறார்கள்.

# நாட்டுக்காக விளையாடுவதுதான் ஒவ்வொரு கிரிக்கெட் வீரரின் கனவாக இருக்கும் : ஆகாஷ் தீப் உற்சாகம்



**மும்பை : பிப். 13,**

**நாட்டுக்காக விளையாடுவதுதான் ஒவ்வொரு கிரிக்கெட் வீரரின் கனவாக இருக்கும் என்று இந்திய கிரிக்கெட் அணிக்குத் தேர்வாகியுள்ள வேகப்பந்து வீச்சாளர் ஆகாஷ் தீப் தெரிவித்துள்ளார்.**

இந்தியாவில், இங்கிலாந்து அணி சுற்றுப்பயணம் செய்து 5 போட்டிகள் கொண்ட கிரிக்கெட் டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. தற்போது 2 போட்டிகள் முடிவடைந்த நிலையில் தொடர் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் உள்ளது. இந்நிலையில், இங்கிலாந்து அணிக்கு எதிரான கடைசி 3 டெஸ்ட் போட்டிகளுக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. பிஹாரைச் சேர்ந்த வேகப்பந்து வீச்சாளர் ஆகாஷ்தீப் இந்திய அணியில் இடம்பிடித்துள்ளார். இவர் தற்போது பெங்கால் அணிக்காகவும், ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணிக்காகவும் விளையாடி வருகிறார். இங்கிலாந்து லயன்ஸ் அணிக்கு எதிராக இந்தியா ஏ அணியில் திறமையை வெளிப்படுத்திய ஆகாஷ் தீப் தற்போது ஸ்ரேயஸ் ஐயருக்கு பதிலாக இந்திய அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதுகுறித்து ஆகாஷ் தீப் செய்தியாளர்களிடம் கூறியதாவது: இந்திய அணிக்குத் தேர்வு செய்யப்பட்டதில் மிகவும் மகிழ்ச்சி அடைந்துள்ளேன். அதே நேரத்தில் அணிக்குத் தேர்வுசெய்யப்பட்டதில் எனக்குளந்தவித ஆச்சரியமும் இல்லை. கடந்த பல சீசன்களாக நான் சிறப்பாக செயல்பட்டிருந்தேன். அதனால் தேர்வுக் குழுவினரின் பார்வை என் மீது விழுந்திருக்கும் என்று நினைத்தேன். அதன்படி நான் இந்திய அணியில் தேர்வு செய்யப்பட்டிருக்கிறேன்.

இங்கிலாந்து லயன்ஸ் அணிக்கெதிராக, இந்திய ஏ அணியில் இடம்பிடித்து நான் விளையாடியபோது சிறப்பாக பந்துவீசியிருந்தேன். தற்போது தேசிய அணிக்காக விளையாடுவது மிகவும் சிறப்பான தருணமாக இருக்கும். நாட்டுக்காக விளையாடுவதுதான் ஒவ்வொரு கிரிக்கெட் வீரரின் கனவாக இருக்கும். அந்த கனவு தற்போது நிஜமாகவே நனவாகப் போவதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. என் மீது நம்பிக்கை வைத்து என்னைத் தேர்வு செய்தத் தேர்வுக் குழுவினருக்கு நன்றி. அவர்களது நம்பிக்கையை நான் காப்பாற்றுவேன். இந்தியாவுக்காக சிறப்பாக விளையாடி விக்கெட்களை வீழ்த்த முடியும் என்ற நம்பிக்கை உள்ளது.

பெங்கால் அணிக்காக கடந்த சில சீசன்களில் சிறப்பாக செயல்பட்டு வருகிறேன். இங்கிலாந்து லயன்ஸ் அணிக்கு எதிராக இந்தியா ஏ அணிக்காக நான் சிறப்பாக பந்து வீசினேன். அப்போதே எனக்கு இந்திய அணியிலிருந்து அழைப்பு வரும் என்று எதிர்பார்த்து காத்திருந்தேன். அதனால் இந்திய அணிக்குத் தேர்வு செய்யப்பட்டு அறிவிக்கப்பட்டபோது அது ஆச்சரியமாக இருக்கவில்லை.

நீங்கள் சிறப்பாக விளையாடி முன்னேற வேண்டும். மேலும் போட்டிகளில் தொடர்ச்சியாக சிறப்பான திறமையை வெளிப்படுத்திக் கொண்டே இருக்கவேண்டும். அப்போதுதான் உங்களுக்கான வாய்ப்பு உங்களுக்குக் கிடைத்துக் கொண்டே இருக்கும். எனது கிரிக்கெட் வாழ்க்கையின் பல்வேறு கட்டங்களில் எனக்கு உதவிய அனைத்து மக்களுக்கும் நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். அவர்களுக்கு என்றென்றும் நான் கடமைப்பட்டவனாக இருப்பேன் என்று ஆகாஷ் தீப் கூறினார்.

# இந்தியாவை கலாய்த்த பாகிஸ்தான் ரசிகர்களுக்கு இர்பான் பதான் பதிலடி



**மும்பை : பிப். 13,**

**ஜூனியர் உலகக்கோப்பை இறுதிப்போட்டியில் இந்திய அணி ஆஸ்திரேலியாவிடம் தோல்வி அடைந்தது.**

தென் ஆப்பிரிக்காவில் நடைபெற்ற ஐசிசி ஜூனியர் உலகக்கோப்பை தொடரில் ஆஸ்திரேலியா சாம்பியன் பட்டம் வென்றது. வருங்கால வீரர்களை முன்கூட்டியே அடையாளப்படுத்தும் நோக்கில் நடத்தப்படும் இந்த தொடரில் உதய் சாஹரன் தலைமையில் விளையாடிய நடப்பு சாம்பியன் இந்தியா லீக் மற்றும் நாக் அவுட் சுற்றில் தோல்வியை சந்திக்காமல் இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது. அதனால் சாம்பியன் பட்டத்தை தக்க வைத்து இந்தியா 6-வது முறையாக கோப்பையை வெல்லும் என்று ரசிகர்கள் எதிர்பார்த்தனர்.

அதை விட சீனியர் கிரிக்கெட்டில் 2023 டெஸ்ட் சாம்பியன்ஷிப் மற்றும் 50 ஓவர் உலகக்கோப்பை தொடர்களின் இறுதிப்போட்டியில் தோல்வியை கொடுத்த ஆஸ்திரேலியாவை இந்த ஜூனியர் தொடரில் தோற்கடித்து இந்தியா பதிலடி கொடுக்குமா என்ற எதிர்பார்ப்பும் ரசிகர்களிடம் இருந்தது. ஆனால் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்த தொடரின் மாபெரும் இறுதிப்போட்டியில் முதலில் பேட்டிங் செய்த ஆஸ்திரேலியா இந்தியாவுக்கு 254 ரன்களை இலக்காக நிர்ணயித்தது. பின்னர் இலக்கை நோக்கி களமிறங்கிய இந்திய அணி 174 ரன்களில் ஆல் அவுட்டாகி தோல்வியை சந்தித்தது. இது மீண்டும் கோடிக்கணக்கான இந்திய ரசிகர்களுக்கு மிகப்பெரிய ஏமாற்றமாக அமைந்தது.

கடந்த வருடம் நடந்த 2 ஐசிசி தொடரிலும் ஆஸ்திரேலியாவிடம் தோல்வியை சந்தித்த இந்தியா தற்போது இதையும் சேர்த்து ஹாட்ரிக் தோல்விகளை பதிவு செய்து ஏமாற்றத்தை சந்தித்துள்ளது. இந்நிலையில் ஆஸ்திரேலியாவிடம் தோல்வியை சந்தித்த காரணத்தால் பாகிஸ்தானை சேர்ந்த ரசிகர்கள் சமூகவலைதளங்களில் இந்தியாவை வழக்கம்போல கிண்டலடித்து வருகின்றனர்.

குறிப்பாக சீனியர் கிரிக்கெட்டில்தான் கடந்த 10 வருடங்களாக தொடர்ந்து ஐ.சி.சி. நாக் அவுட் போட்டிகளில் தோல்வியை சந்தித்து வருகிறீர்கள் என்று பார்த்தால் ஜூனியர் கிரிக்கெட்டிலும் சாதிக்க முடியவில்லையா என்று இந்தியாவை அந்நாட்டு ரசிகர்கள் கிண்டலடித்து வருகிறார்கள்.

அதனால் கோபமடைந்த முன்னாள் இந்திய வீரர் இர்பான் பதான் இதே தொடரின் அரையிறுதியில் ஆஸ்திரேலியாவிடம் தோல்வியை சந்தித்து இறுதிப்போட்டிக்கு தகுதி பெறாத நீங்கள் இந்தியாவைப் பற்றி பேச தகுதியற்றவர்கள் என்ற வகையில் தனது எக்ஸ் பக்கத்தில் பாகிஸ்தான் ரசிகர்களுக்கு பதிலடி கொடுத்துள்ளார்.

இது குறித்து அவர் பதிவிட்டுள்ளது பின்வருமாறு:- "அவர்களின் அண்டர்-19 அணி இறுதிப்போட்டிக்கு தகுதி பெறாத சூழ்நிலையில் எல்லைக்கு அப்பால் உள்ள விசைப்பலகை (கீபோர்டு) வீரர்கள் நமது இளம் வீரர்களின் தோல்வியால் மகிழ்ச்சியடைகிறார்கள். இந்த எதிர்மறையான அணுகுமுறை அவர்கள் தேசத்தின் மனநிலை மோசமாக இருப்பதை பிரதிபலிக்கிறது" என்று பதிவிட்டுள்ளார்.

# புரோ ஆக்கி லீக் : இந்திய அணி 2-வது வெற்றி



**புவனேஸ்வர் : பிப். 13,**

**இதில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு நடந்த லீக் ஆட்டத்தில் இந்தியா, நெதர்லாந்து அணிகள் மோதின.**

9 அணிகள் இடையிலான 5-வது புரோ ஆக்கி லீக் தொடரின் 2-வது கட்ட போட்டி ஒடிசா தலைநகர் புவனேஸ்வரில் நடைபெற்று வருகிறது. இதில் நடந்த லீக் ஆட்டத்தில் இந்தியா - நெதர்லாந்து அணிகள் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டம் வழக்கமான நேர முடிவில் 2-2 என்ற கோல் கணக்கில் சமநிலையை எட்டியது.

இதனால் வெற்றியை தீர்மானிக்க பெனால்டி ஷூட் - அவுட் முறை கடைபிடிக்கப்பட்டது. ஷூட்-அவுட்டில் இந்தியா முதல் 4 வாய்ப்புகளையும் கோலாக்கியது. அதே சமயம் நெதர்லாந்தின் 4 வாய்ப்புகளில் 2 ஷாட்டை இந்திய கோல் கீப்பர் ஸ்ரீஜேஷ் தடுத்து நிறுத்தி ஹீரோவாக ஜொலித்தார். முடிவில் இந்தியா 4-2 என்ற கோல் கணக்கில் நெதர்லாந்தை வீழ்த்தி 2-வது வெற்றியை சுவைத்தது. இந்திய அணி தனது அடுத்த ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவுடன் வருகிற 15-ந் தேதி மோதுகிறது.

# கே.எல்.ராகுல், ஜடேஜா வருகையால் இந்திய அணி வலிமை பெறும் - சேப்பல்



**புதுடெல்லி : பிப். 13,**

**இங்கிலாந்துக்கு எதிரான 2-வது டெஸ்ட் போட்டியில் கே.எல்.ராகுல், ஜடேஜா ஆகியோர் காயத்தால் விளையாடவில்லை. இருவரும் 3-வது டெஸ்ட் போட்டிக்கான அணியில் இடம்பெற்றுள்ளனர். அதே நேரத்தில் ஷ்ரேயாஸ் அய்யர் எஞ்சிய 3 டெஸ்டில் ஆட வில்லை.**

இந்த நிலையில் கே.எல். ராகுல், ஜடேஜா வருகையால் இந்திய அணி வலிமை பெறும் என்று ஆஸ்திரேலிய முன்னாள் கேப்டன் இயன் சேப்பல் தெரிவித்து உள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது:- இந்தியா ஒரு வலிமையான அணியாகும். அவர்களுக்கு திறமையான கேப்டன் ரோகித் சர்மா இருக்கிறார். காயத்தில் இருந்து குணமடைந்த ஜடேஜா மற்றும் கே.எல்.ராகுல் அணிக்கு திரும்பி இருக்கிறார்கள். இருவரும் இந்திய அணியை வலிமைப்படுத்துவார்கள்.

ஆனால் விராட்கோலி எஞ்சிய 3 டெஸ்டிலும் விளையாடமாட்டார் என்பது இந்திய அணிக்கு இழப்பே. தேர்வு குழுவினர் ஷ்ரேயாஸ் அய்யரின் பேட்டிங் திறமையை மிகைப்படுத்தி மதிப்பிடுவதை நிறுத்திவிட்டு, குல்தீப் யாதவின் பந்துவீச்சு திறனை அதிகமாக மதிப்பிட கற்றுக் கொள்ள வேண்டும் என்று இயன் சேப்பல் கூறியுள்ளார். மோசமான பேட்டிங் காரணமாகவே ஷ்ரேயாஸ் அய்யர் எஞ்சிய டெஸ்ட் தொடரில் இருந்து நீக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

# உலகின் நெ.1 மாரத்தான் வீரர் கெல்வின் கிப்டம் : சாலை விபத்தில் பலி



**கென்யா : பிப். 13,**

**உலகின் நெ.1 மாரத்தான் வீரரான கெல்வின் கிப்டம், கென்யாவில் நிகழ்ந்த கார் விபத்து ஒன்றில் உயிரிழந்தார்.**

உலக மாரத்தான் சாதனையாளரான கெல்வின் கிப்டம் தனது பயிற்சியாளர் கெர்வைஸ் ஹக்கிசிமானா உடன், நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடந்த சாலை விபத்தில் பலியானார். இது குறித்து கென்ய நாடாளுமன்ற உறுப்பினர் கிடியோன் கிமையோ உறுதி செய்த பிறகே வெளியுலகுக்கு இந்த பரிதாப செய்தி தெரிய வந்தது. கென்யாவின் எல்டோரெட் - கப்டகாட் சாலையில் நிகழ்ந்த கார் விபத்தில் இருவரும் பலியானார்கள்.

24 வயதான கிப்டம் சிகாகோ மாரத்தான் போட்டியில் இரண்டு மணி நேரம் 35 வினாடிகளில் கடந்து புதிய உலக சாதனை படைத்தார். மேலும் லண்டன் மாரத்தானை 2 மணி நேரம் ஒரு நிமிடம் 25 வினாடிகளில் கடந்து, முன்னதாக உலக சாதனை புரிந்தார். 2022 வாலென்சியா மராத்தானில், கிப்டம் 2 மணிநேரம் ஒரு நிமிடம் 53 வினாடிகளில் கடந்து, வரலாற்றில் மிக வேகமான அறிமுக மராத்தான் சாதனை என்பதை படைத்தார்.

இவற்றில் சிகாகோ சாதனை, மாரத்தான் ஓட்டங்களில் இதுவரையிலான உலக சாதனையாக உள்ளது. இந்த வகையில் உலகின் நெ.1 மாரத்தான் சாதனையாளராக கிப்டம் அங்கீகரிக்கப்பட்டார். அடுத்த நிகழ்வாக, எதிர்வரும் ஏப்ரல் மாதம் ரோட்டர்டாம் மாரத்தானில் அவர் பங்கேற்கவிருந்தார், இது உலகசாதனை படைத்த பிறகு அவரது முதல் நிகழ்வாக காத்திருந்ததில், விளையாட்டு உலகினர் மத்தியில் பெரும் எதிர்பார்பை உருவாக்கி இருந்தது.

இதனிடையே கிப்டமின் அகால மரண சேதி சக வீரர்கள் மற்றும் ரசிகர்கள் மத்தியில் உலுக்கி உள்ளது. இது தொடர்பாக உலக தடகளத் தலைவர் செப்கோ கூறுகையில், "கெல்வின் கிப்டம் மற்றும் அவரது பயிற்சியாளர் கெர்வைஸ் ஹக்கிசிமானாவின் இழப்பை அறிந்து நாங்கள் அதிர்ச்சியும், ஆழ்ந்த வருத்தமும் அடைந்துள்ளோம். சிகாகோவில் கெல்வின் தனது அசாதாரண மாரத்தான் உலக சாதனையை படைத்தபோது, அவருடைய வரலாற்று சாதனையை நான்தான் அதிகாரப்பூர்வமாக அங்கீகரித்தேன். நம்பமுடியாத சாதனைக்கு சொந்தக்காரரான இளம் தடகள வீரர் நம்மை விட்டுச் செல்வதை பெரும் இழப்பாக கருதுகிறோம்" என்று தெரிவித்துள்ளார்.

வரலாறு சினிமா

# 'சைரன்' திரைப்படத்திற்காக உடல் எடை அதிகரித்த கீர்த்தி சுரேஷ்



**சென்னை : பிப். 13,**

**ஜெயம் ரவி, கீர்த்தி சுரேஷ், அனுபமா பரமேஸ்வரன், சமுத்திரக்கனி, அழகம்பெருமாள் நடித்துள்ள படம், 'சைரன்'. அந்தோணி பாக்யராஜ் இயக்கியுள்ளார். செல்வகுமார் ஒளிப்பதிவு செய்ய, ஜி.வி. பிரகாஷ் குமார் இசை அமைத்துள்ளார்.**

ஹோம் மூவி மேக்கர்ஸ் சார்பில் சுஜாதா விஜய்குமார் தயாரித்துள்ள இப்படம், வரும் 16ம் தேதியன்று திரைக்கு வருகிறது. படம் குறித்து நிருபர்களிடம் சுஜாதா விஜய்குமார் கூறுகையில், 'ஒரு ஆம்புலன்ஸ் சைரனுக்கும், போலீஸ் சைரனுக்கும் இடையிலான போராட்டம்தான் படம். எப்போதுமே வித்தியாசமான கேரக்டர்களில் நடித்து அசத்தும் ஜெயம் ரவி, இப்படத்திலும் வெவ்வேறு தோற்றங்களில் நடித்து அசத்தியுள்ளார்.

படம் பார்க்கும்போது ரசிகர்களுக்கு அது புரியும். கீர்த்தி சுரேஷுக்கு அவரது பயணத்தில் இது ஒரு முக்கியமான படமாக இருக்கும். 5 கிலோ உடல் எடை அதிகரித்து போலீஸ் வேடத்தில் நடித்துள்ளார். எல்லா கதாபாத்திரங்களிலும், எல்லா மொழிகளிலும் அசத்தும் சமுத்திரக்கனி, இதிலும் மாறுபட்ட கேரக்டரில் தோன்றி சிறப்பாக நடித்திருக்கிறார். படம் முழுக்க யோகி பாபு வருகிறார். அவரது நடிப்பைப் பார்த்து சிரித்துக் கொண்டே இருந்தேன்' என்றார். அப்போது ஜெயம் ரவி, ஜி.வி.பிரகாஷ் குமார், அழகம்பெருமாள் மற்றும் படக்குழுவினர் உடனிருந்தனர்.

# யார் வேண்டுமானாலும் அரசியலுக்கு வரலாம் - வாணி போஜன்



**சென்னை : பிப். 13,**

**தமிழ் திரையுலகில் முன்னணி நடிகையான வாணி போஜன் தனியார் நகைக்கடையின் சென்னை கிளையை திறந்து வைத்தார். பிரமாண்டமாக துவங்கப்பட்ட வில்வா ஜுவல்ஸ்-ஐ விளக்கேற்றி துவக்கி வைத்த வாணி போஜன், கடையில் உள்ள நகைகளை பார்த்து ரசித்தார்.**

இதைத் தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த வாணிபோஜன், "சினிமாவில் மசாலா படத்தை பார்ப்பதை விட நல்ல கருத்துள்ள படங்களை பார்ப்பதில் பெரிய வித்தியாசம் இருக்கிறது. சமூக கருத்துள்ள படம் ஒன்றில் நடித்து முடித்துள்ளேன். விரைவில் அந்த படம் வெளியாக இருக்கிறது.

அரசியலுக்கு இவர்கள் தான் வரவேண்டும், இவர்கள் வரக்கூடாது என்றில்லை. நல்லது செய்ய விரும்பும் யார் வேண்டுமானாலும் அரசியலுக்கு வரலாம். செங்கலம் வெப் சீரிசில் நடிக்கும் போது, அரசியலுக்கு வரவேண்டும் என்ற ஆசை எனக்கு இருந்தது. இப்பவும் அந்த ஆசை இருக்கு.

அரசியலில் விஜய்க்கு ஒரு வாய்ப்பு கொடுக்கலாம். அவர் என்ன செய்வார் என்பதை பார்க்கலாம். இந்த காலக்கட்டத்தில் குழந்தைகளுக்கு மிகவும் அவசியமான ஒன்று, சமூக வலைதளம் குறித்த படம் இப்போது வெளியாக வேண்டும்," என்று தெரிவித்தார்.

# நடிப்புக்கு திரும்புகிறேன் : நடிகை சமந்தா உறுதி



**சென்னை : பிப். 13,**

**தமிழ், தெலுங்கில் முன்னணி நடிகையாக இருக்கும் சமந்தா, தசை அழற்சி நோய்க்காகச் சிகிச்சை மேற்கொண்டு வந்தார். இதற்காக நடிப்புக்கு இடைவெளி கொடுத்துவிட்டு ஓய்வு எடுத்து வருகிறார்.**

சமீபத்தில் 'சிட்டாடல்' வெப் தொடருக்கான டப்பிங்கை முடித்த அவர், நடிப்புக்குத் திரும்ப இருப்பதாகச் செய்திகள் வெளியாகின. 'உப்பென்னா' புச்சிபாபு இயக்கும் படத்தில் ராம் சரண் ஜோடியாக அவர் நடிக்க இருப்பதாகக் கூறப்பட்டது.

இந்நிலையில் நடிப்புக்குத் திரும்புவதை சமந்தா உறுதிப்படுத்தியுள்ளார். இது பற்றி அவர் வெளியிட்டுள்ள வீடியோவில், "நடிப்புக்கு மீண்டும் திரும்புகிறேன். இடைப்பட்ட காலத்தில் வேலையில்லாமல்தான் இருந்தேன்.

ஆனால், என் நண்பருடன் உடல் ஆரோக்கியம் குறித்து உருவாக்கியுள்ள 'போட்காஸ்ட்' ஒன்றை அடுத்த வாரம் வெளியிடுகிறேன். உங்களில் சிலருக்கு அது பயனுள்ளதாக இருக்கும்" என்று தெரிவித்துள்ளார்.

# 'சுயம்பு' படத்துக்காக சம்யுக்தா குதிரையேற்ற பயிற்சி



**சென்னை : பிப். 13,**

**நிகில் சித்தார்த்தா நடிப்பில் உருவாகும் படம், 'சுயம்பு'. வரலாற்றுக் கதையைக் கொண்ட இந்தப் படம் தமிழ் உட்பட பல்வேறு மொழிகளில் வெளியாக இருக்கிறது.**

தாகூர் மதுவழங்க, பிக்சல் ஸ்டுடியோ சார்பில் புவன், ஸ்ரீகர் தயாரிக்கின்றனர். மிஷ்கினிடம் உதவி இயக்குநராக பணியாற்றிய பரத் கிருஷ்ணமாச்சாரி இயக்குகிறார். சம்யுக்தா நாயகியாக நடிக்கிறார். மனோஜ் பரமஹம்சா ஒளிப்பதிவு செய்கிறார். ரவி பஸ்ரூர் இசையமைக்கிறார்.

இந்தப் படத்துக்காக சம்யுக்தா குதிரையேற்றப் பயிற்சி பெற்றுள்ளார். இது தொடர்பான புகைப்படங்களைப் பகிர்ந்துள்ள அவர், "ஒரு நடிகையாக புதிய விஷயங்களைக் கற்றுக் கொள்வது எனக்குக் கிடைத்த பாக்கியம். 'சுயம்பு' படத்துக்காக, நான் குதிரை சவாரி கற்றுக் கொண்டிருக்கிறேன். இது ஒரு ஆன்மிக மற்றும் இனிமையான அனுபவமாக இருந்தது" என்று தெரிவித்துள்ளார்.





# பகலில் நிருபர் : இரவில் ஹமாஸ் பயங்கரவாதி

## அதிர்ந்து போன இஸ்ரேல் ராணுவம்



**காசா : பிப். 13,**

**ஹமாஸ் பயங்கரவாத அமைப்பின் விமான பிரிவுக்கான ஆய்வு மற்றும் வளர்ச்சி பிரிவில் 2022-ம் ஆண்டு இறுதியில் பணியாற்றி வந்திருக்கிறார் என்று இஸ்ரேல் கூறியுள்ளது.**

இஸ்ரேல் மீது ஹமாஸ் பயங்கரவாத அமைப்பு கடந்த ஆண்டு அக்டோபர் 7-ந் தேதி திடீரென தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலில், இஸ்ரேலை சேர்ந்த மக்கள் 1,200 பேர் உயிரிழந்தனர். 250 பேர் பணய கைதிகளாக சிறை பிடிக்கப்பட்டனர். அவர்களில் சிலர் விடுவிக்கப்பட்டபோதிலும், 130-க்கும் மேற்பட்டோர் ஹமாஸ் அமைப்பின் பிடியில் உள்ளனர். ஆனால், அவர்களில் 30 பேர் மரணம் அடைந்திருக்க கூடும் என நம்பப்படுகிறது.

இதற்கு இஸ்ரேலும் பதிலடி கொடுத்தது. அவர்களை அடியோடு ஒழிக்கும் வரை ஓயமாட்டோம் என இஸ்ரேல் அரசும் அறிவித்தது. தொடர்ந்து தாக்குதலை மற்றும் பயங்கரவாதிகளை தேடும் பணியை தீவிரப்படுத்த இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு உத்தரவிட்டார்.

ஹமாஸ் பயங்கரவாத அமைப்புக்கு எதிரான போரானது நான்கு மாதங்களுக்கும் மேலாக தொடர்ந்து வருகிறது. காசாவில் உள்ள 23 லட்சம் பேரில் பாதிக்கும் மேற்பட்டோர் இஸ்ரேல் ராணுவ ஆக்கிரமிப்பால் எகிப்து எல்லையையொட்டிய பகுதிக்கு புலம்பெயர்ந்து சென்றனர். இந்நிலையில், பகலில் நிருபராகவும், இரவில் பயங்கரவாதியாகவும் செயல்பட்ட முகமது வஷா என்ற நபரை இஸ்ரேல் பாதுகாப்பு படை அடையாளம் கண்டுள்ளது.

சில வாரங்களுக்கு முன்பு காசா முனையின் மத்திய பகுதியில் நடந்த அதிரடி நடவடிக்கையில், அவருடைய மடிக்கணினி ஒன்றை இஸ்ரேல் ராணுவம் கைப்பற்றியது.

இஸ்ரேல் பாதுகாப்பு படையினர், அதனை ஆய்வு செய்ததில், திடுக்கிடும் தகவல்கள் தெரிய வந்தன. அதில், காணப்பட்ட புகைப்படங்கள் மற்றும் ஆவணங்களில் இருந்து அவர், அல்-ஜசீரா பத்திரிகையின் நிருபராகவும், ஹமாஸ் அமைப்பின் மூத்த தளபதியாகவும் செயல்பட்டு வருகிறார் என தெரிய வந்துள்ளது. இதுபற்றி இஸ்ரேல் பாதுகாப்பு படையின் லெப்டினென்ட் கர்னல் மற்றும் அரபிக்கான செய்தி தொடர்பாளர் அவிச்சே அத்ரே கூறும்போது, சமீப மாதங்களாக அவர் பத்திரிகையாளராக செயல்பட்டார். ஆனால், ஹமாஸ் பயங்கரவாத அமைப்பின் உறுப்பினராகவும் அவர் பணியாற்றி இருக்கிறார்.

இதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. இதன்படி, ஹமாஸ் அமைப்பின் பீரங்கி அழிப்பு படை பிரிவின் முக்கிய தளபதியாக இருந்திருக்கிறார். அந்த பயங்கரவாத அமைப்பிற்கான விமான பிரிவுக்கான ஆய்வு மற்றும் வளர்ச்சி பிரிவில் 2022-ம் ஆண்டு இறுதியில் பணியாற்றி வந்திருக்கிறார் என்று கூறியுள்ளார். இதனால், பத்திரிகையாளர் உடையணிந்து பின்னர் பயங்கரவாதிகளாக செயல்படும் மற்ற நபர்களை பற்றிய விவரங்களையும் நாங்கள் வருங்காலத்தில் வெளியிடுவோமா? என்பது பற்றி எங்களுக்கே தெரியவில்லை என அத்ரே தெரிவித்து உள்ளார்.

இதற்காக அல்-ஜசீரா தொலைக்காட்சி செய்தி சேனலையும், இஸ்ரேல் படை கடுமையாக சாடியுள்ளது. பாரபட்சமற்ற செய்திகளை உங்களுடைய நிருபர்கள் வழங்கி வருகிறார்கள் என இதுவரை நாங்கள் நினைத்து வந்தோம். அவர்களை ஹமாஸ் பயங்கரவாதிகளாக முன்னிலைப்படுத்தும் வகையில், நீங்கள் அவர்களை உருவாக்கும் பணியில் பங்காற்றுவீர்கள் என நினைக்கவில்லை என்று தெரிவித்து உள்ளது.

கடந்த மாதம், காசாவின் ரபா நகரில் நடந்த வான்வழி தாக்குதலில், அல்-ஜசீரா பத்திரிகையாளர்கள் 2 பேர் கொல்லப்பட்டனர். இந்த சம்பவம் தொடர்ச்சியாக, அவர்கள் இருவரும் ஹமாஸ் மற்றும் பாலஸ்தீனத்தின் இஸ்லாமிய ஜிகாத் பயங்கரவாத குழுக்களை சேர்ந்த உறுப்பினர்கள் என்றும் இஸ்ரேல் ராணுவம் குற்றச்சாட்டாக தெரிவித்து இருந்தது.

# குழந்தைகளை பாலியல் வன்கொடுமை செய்யும் குற்றவாளிகளுக்கு ஆண்மை நீக்கம் – அதிரடி சட்டம் கொண்டுவந்த நாடு




**அண்டனானரிவோ : பிப். 13,**

**குழந்தைகளை பாலியல் வன்கொடுமை செய்யும் குற்றவாளிகளுக்கு ஆண்மை நீக்கம் செய்ய அதிரடி சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.**

கிழக்கு ஆப்பிரிக்காவில் இந்திய பெருங்கடலில் அமைந்துள்ள தீவு நாடு மடகாஸ்கர். இந்நாட்டின் மொத்த மக்கள் தொகை 2 கோடியே 80 லட்சம் ஆகும். இதனிடையே, மடகாஸ்கரில் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் அதிகரித்து வருகின்றன. கடந்த ஆண்டு 600 சிறுமிகள்/ குழந்தைகள் பாலியல் வன்கொடுமை வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் கடந்த ஜனவரி மாதம் மட்டும் 133 சிறுமிகள்/ குழந்தைகள் பாலியல் வன்கொடுமை வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை குற்றங்கள் அதிகரித்துவருவதால் குற்றங்களை தடுக்கவும், குற்றவாளிகளுக்கு தண்டனையை அதிகரிக்கவும் மடகாஸ்கர் அரசு அதிரடி முடிவெடுத்துள்ளது. அதன்படி, குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை குற்றங்களில் ஈடுபடும் குற்றவாளிகளுக்கு ஆண்மை நீக்கம்செய்யமடகாஸ்கர் அரசு சட்டம் கொண்டுவந்துள்ளது.

குற்றவாளிகளுக்குரசாயன ரீதியிலும், அறுவை சிகிச்சை மூலமாகவும் ஆண்மைநீக்கம் செய்யவகைசெய்யும்வகையில் கொண்டுவரப்பட்டுள்ளசட்டம் மடகாஸ்கர்நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. தற்போது நிறைவேற்றப்பட்டுள்ள சட்டம் அந்நாட்டின் உயர் அரசியலமைப்புநீதிமன்றத்தின் அங்கீகாரத்தை பெற்றுபின்னர் ஜனாதிபதியின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட உள்ளது. ஜனாதிபதி ஒப்புதல் அளித்த உடன் சட்டம் அமலுக்கு வர உள்ளது.

இந்த சட்டத்தின்படி, 10 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளை பாலியல் வன்கொடுமைசெய்தவழக்கில் குற்றம் நிரூபிக்கப்பட்டால் குற்றவாளிக்கு அறுவை சிகிச்சை மூலம் ஆண்மை நீக்கப்படும். 10 முதல் 13 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளை பாலியல் வன்கொடுமைசெய்தவழக்கில் குற்றம் நிரூபிக்கப்பட்டால் குற்றவாளிக்கு அறுவை சிகிச்சை மூலமோ அல்லது ரசாயன முறையிலோ ஆண்மை நீக்கப்படும். 14 முதல் 17 வயதிற்கு உட்பட்ட சிறுமிகளை பாலியல் வன்கொடுமைசெய்தவழக்கில் குற்றம் நிரூபிக்கப்பட்டால் குற்றவாளிக்கு ரசாயன முறையில் ஆண்மை நீக்கப்படும். ஆண்மை நீக்கம் மட்டுமின்றி பாலியல் வழக்கில் குற்றவாளிகளுக்கு ஆயுள் தண்டனையும் விதிக்கப்படும் வகையில் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. மடகாஸ்கர் அரசு கொண்டுவந்துள்ளசட்டத்திற்கு பல்வேறு தரப்பினரும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

# காசாவின் ரபா பகுதியில் இருந்து இரண்டு பிணைக்கைதிகளை மீட்டது இஸ்ரேல் ராணுவம்



**பாலஸ்தீனம் : பிப். 13,**

**இஸ்ரேல் படையினருக்கும், பாலஸ்தீனத்தின் ஹமாஸ் அமைப்பினருக்கும் இடையே கடந்த 3 மாதத்துக்கும் மேலாக கடும் சண்டை நடந்து வருகிறது.**

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தெற்கு காசா எல்லையில் அமைந்துள்ள ரபா பகுதியில் இஸ்ரேல் படையினர் அதிரடி தாக்குதல் நடத்தினார்கள். வான்வழியாக சரமாரியாக குண்டுகள் வீசப்பட்டன. இதில் 7 பேர் இறந்துவிட்டதாக பாலஸ்தீனம் தெரிவித்துள்ளது. ரபா நகரில் குடியிருப்பு பகுதியில் இஸ்ரேல் படையினர் நடத்திய சோதனையில் அங்குள்ள ஒரு வீட்டில் ஹமாஸ் அமைப்பினர் பிடியில் இருந்த 2 பிணைக்கைதிகளை பத்திரமாக மீட்டதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

அதில் ஒருவரது பெயர் பெர்னாண்டோ சைமன் (வயது 60) மற்றொருவர் பெயர் லூயிஸ் ஹர்க் (70). தற்போது 2 பேரும் நல்ல ஆரோக்கியத்துடன் உள்ளனர்.

# ஐக்கிய நாடுகள் சபை பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியாவை நிரந்தர உறுப்பினராக்க வேண்டும்

## ரஷ்ய தூதர் டெனிஸ் அலிபோவ் வலியுறுத்தல்



**புதுடெல்லி : பிப். 13,**

**ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு கவுன்சிலில் 15 நாடுகள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய 5 நாடுகள் மட்டுமே நிரந்தர உறுப்பினராக உள்ளன. மற்ற 10 நாடுகள் சுழற்சி அடிப்படையில் 2 ஆண்டுகளுக்கு தற்காலிக உறுப்பினராக இடம்பெறும். அதன்படி இந்தியாவும் 2 முறை தற்காலிக உறுப்பினராக இடம்பெற்றுள்ளது.**

கடந்த 1945-ம் ஆண்டு தொடங்கப்பட்ட ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் தொடர்ந்து 5 நாடுகள் மட்டுமே ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. சர்வதேச பிரச்சினைகளுக்கு தீர்வு காண எந்தத் தீர்மானம் கொண்டு வந்தாலும், அதை 'வீட்டோ' அதிகாரம் மூலம்தடுக்கவோ அல்லது நிறைவேற்றவோ இந்த 5 நாடுகளால் மட்டுமே முடியும். இந்நிலையில், ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலை விரிவுப்படுத்த வேண்டும் என்று பல ஆண்டுகளாக பல நாடுகளும் வலியுறுத்தி வருகின்றன. குறிப்பாக இந்தியாவை நிரந்தர உறுப்பினராக்க பல நாடுகள் ஆதரவு தெரிவித்து வருகின்றன.

இந்நிலையில், இந்தியாவுக்கான ரஷ்ய தூதர் டெனிஸ் அலிபோவ் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தனியார் செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது:

ஐ.நா. சபையை மறுசீரமைக்க வேண்டிய அவசியம் உள்ளது. அதன் கீழ் செயல்படும் ஏஜென்சிகளையும் மறுசீரமைக்க வேண்டும். குறிப்பாக ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியாவை நிரந்தர உறுப்பினராக்க வேண்டும். உலகளவில் சமநிலையை மேம்படுத்த வேண்டுமானால் பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியாவுக்கு நிரந்தர இடம் தரவேண்டும். இதுதொடர்பாக நாங்கள் தொடர்ந்து ஆதரவு அளித்து வருகிறோம்.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்தரமற்ற உறுப்பினராக பொறுப்பேற்று இந்தியாவும் தனது தகுதியை 2 முறை நிரூபித்துள்ளது. அத்துடன், ஜி20 அமைப்புக்கு தலைமையேற்று மிகச் சிறப்பாக செயலாற்றியது. உலக நாடுகளிடம் ஏற்படும் கருத்து வேறுபாடுகளை போக்கி ஒருமித்த கருத்து ஏற்படவும், சமரச தீர்வு ஏற்படவும் ஜி20 உச்சி மாநாட்டில் இந்தியா திறம்பட செயலாற்றியது.

பாதுகாப்பு கவுன்சிலில் மேற்கத்திய நாடுகளின் பிரதிநிதித்துவம் ஏற்கெனவே அதிகமாக உள்ளது. தற்போதுள்ள யதார்த்தம் என்ன என்பதை கருத்தில் கொண்டு பாதுகாப்பு கவுன்சிலை விரிவுப்படுத்த வேண்டும். அதில் இந்தியாவுக்கு நிரந்தர இடம் தர வேண்டும் என்பதுதான் எங்களது நிலைப்பாடு.

மேலும், ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்க நாடுகளில் சிலவற்றையும் ஒருமித்த கருத்துடன் பாதுகாப்பு கவுன்சிலில் சேர்க்க வேண்டும் என்று இந்தியாவுக்கான ரஷ்ய தூதர் டெனிஸ் அலிபோவ் கூறியுள்ளார்.

# பாகிஸ்தானில் கூட்டணி ஆட்சி அமைக்க நவாஸ் ஷெரீப் கட்சி அழைப்பு : பேச்சுவார்த்தை நேற்று தொடங்கியது



**இஸ்லாமாபாத் : பிப். 13,**

**பாகிஸ்தானில் கூட்டணி ஆட்சி அமைக்க நவாஸ் ஷெரீப்-ன் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்) அழைப்பு விடுத்துள்ள நிலையில் அக்கட்சியுடன் பேச்சுவார்த்தை நடத்த பாகிஸ்தான் மக்கள் கட்சி, பிஎம்எல்(க்யூ) ஆகியவை முன்வந்துள்ளன.**

பாகிஸ்தான் தேசிய அவைக்கு 266 உறுப்பினர்களை தேர்வு செய்வதற்கான தேர்தல் கடந்த 8-ம் தேதி நடைபெற்றது. இதில் இம்ரான் கானின் பிடிஐ கட்சி தேர்தலில் போட்டியிட தடை விதிக்கப்பட்டதால் அக்கட்சியினர் சுயேட்சையாக போட்டியிட்டனர். அவர்கள் 101 இடங்களில் வெற்றி பெற்றுள்ளனர். முன்னாள் பிரதர் நவாஸ் ஷெரீப்பின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்) கட்சி 75 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. பிலாவல் பூட்டோவின் பாகிஸ்தான் மக்கள் கட்சி 54 இடங்களிலும், எம்க்யூஎம் கட்சி 17 இடங்களிலும், பிஎம்எல்(க்யூ) கட்சி 3 இடங்களிலும் வெற்றி பெற்றுள்ளன.

எந்த கட்சிக்கும் தனிப்பெரும்பான்மை இல்லாத நிலையில், இம்ரான் கானின் ஆதரவாளர்கள் தவிர்த்த மற்றவர்கள் அனைவரையும் இணைத்து கூட்டணி ஆட்சி அமைக்க பிஎம்எல் (நவாஸ்) கட்சி அழைப்பு விடுத்துள்ளது. பிரதமர் பதவியையும் நிதி அமைச்சர் பதவியையும் தன் வசம் வைத்துக்கொள்ள பிஎம்எல் (நவாஸ்) விரும்புவதாகவும், பாகிஸ்தான் மக்கள் கட்சிக்கு அதிபர் பதவி மற்றும் சபாநாயகர் பதவி ஆகியவற்றை வழங்க தயாராக இருப்பதாகவும் தகவல் வெளியாகி உள்ளது. மற்ற கட்சிகளுக்கு துணை சபாநாயகர் பதவி, அமைச்சர் பதவி ஆகியவற்றை வழங்க பிஎம்எல் (நவாஸ்) கட்சி விருப்பமாக உள்ளது.

பிலாவல் பூட்டோவை பிரதமர் வேட்பாளராக முன்னிருத்தி பாகிஸ்தான் மக்கள் கட்சி இந்த தேர்தலை எதிர்கொண்டது. எனவே, அக்கட்சி பிரதமர் பதவியைப் பெற விரும்புவதாகத் தகவல் வெளியாகி உள்ளது. எனினும், 3 முறை பிரதமராக இருந்த நவாஸ் ஷெரீப் இம்முறை மீண்டும் பிரதமராக திட்டமிட்டு வருகிறார். இந்நிலையில், பிஎம்எல் (நவாஸ்) கட்சியுடன் பேச்சுவார்த்தை நடத்த குழு ஒன்றை அமைத்துள்ள பாகிஸ்தான் மக்கள் கட்சி, நேற்று பேச்சுவார்த்தையை முறைப்படி தொடங்கி உள்ளது. பிஎம்எல்(க்யூ) கட்சியின் தலைவர் சவுத்ரி சுஜாத், நவாஸ் ஷெரீப்பை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை லாகூரில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த திட்டமிட்டிருந்த நிலையில் அந்த சந்திப்பு இஸ்லாமாபாத்தில் நேற்று நடைபெற்றதாக தகவல் வெளியாகி உள்ளது.

# அமெரிக்காவில் சர்ச்சில் துப்பாக்கி சூடு நடத்திய மர்ம பெண் சுட்டு கொலை




**ஹூஸ்டன் : பிப். 13,**

**அவரை நோக்கி, பணியில் இருந்த 2 போலீசார் உடனடியாக சுட்டனர். இதில், சம்பவ இடத்திலேயே அந்த பெண் உயிரிழந்து விட்டார்.**

அமெரிக்காவின்ஹூஸ்டன் நகரில் 3700 சவுத்வெஸ்ட் பிரீவே என்ற பகுதியில் ஜோயல் ஆஸ்டீன் லேக்வுட் என்ற பெயரில் கிறிஸ்தவ ஆலயம் (சர்ச்) ஒன்று உள்ளது. இந்த ஆலயம் நகரில், மக்கள் பரவலாக கூடும் மற்றும் அதிக பரபரப்பு நிறைந்த பகுதியில் அமைந்துள்ளது. 6 மைல்கள் பரப்பளவில் அமைந்த மிக பெரிய ஆலயமும் ஆகும்.

இந்நிலையில், ஆலயத்திற்கு 30 முதல் 35 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர் கையில் குழந்தை ஒன்றுடனும், மற்றொரு கையில் துப்பாக்கியுடனும் நுழைந்துள்ளார். அவர், ஆலயத்தில் நுழைந்ததும் துப்பாக்கியால் சுட தொடங்கினார். இதனால் பிரார்த்தனைக்காக கூடியிருந்த மக்கள் அதிர்ச்சி அடைந்தனர். இதனையடுத்து, பாதுகாப்பு பணியில் இருந்த 2 போலீசார் உடனடியாக அவரை நோக்கி சுட்டனர். இதில், சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்து விட்டார். அவருடைய கையில் இருந்த 5 வயது கொண்ட குழந்தைக்கு துப்பாக்கி சூட்டில் பலத்த காயம் ஏற்பட்டது.

உடனடியாக குழந்தையை சிகிச்சைக்காக கொண்டு சென்றனர். இதேபோன்று 57 வயதுடைய நபர் ஒருவரும் காயமடைந்து, மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இதுபற்றி ஹூஸ்டன் நகர போலீஸ் அதிகாரியான பின்னர் என்பவர் கூறும்போது, சம்பவ பகுதியிலேயே அந்த பெண் மரணமடைந்து உள்ளார். குழந்தையை சுட்டது யார் என தெரியவில்லை. ஆண் நபரையும் துப்பாக்கியால் சுட்டது யாரென்ற விவரம் வெளிவரவில்லை.

இந்த துப்பாக்கி சூட்டிற்கான பின்னணி பற்றிய விவரம் எதுவும் தெரிய வரவில்லை. குழந்தைக்கும், அந்த பெண்ணுக்கும் என்ன தொடர்பு என்றும் தெரியவில்லை என கூறியுள்ளார். தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது.

# கருத்து சுதந்திரத்திற்கு போராடும் வழக்கறிஞருக்கு அமெரிக்க அரசு விருது



**நைஜீரியா : பிப். 13,**

**நைஜீரியா நாட்டின் கானோ பகுதியை சேர்ந்த வழக்கறிஞர் கோலா அலப்பின்னி.**

கோலா, இங்கிலாந்து நாட்டின் எஸ்செக்ஸ் பல்கலைக்கழகத்தில் சர்வதேச மனித உரிமைகள் சம்பந்தமான சட்ட படிப்பில் பட்டம் பெற்றவர். சட்டத்துறையில் ப்ரோ போனோ எனப்படும், வழக்கறிஞருக்கான கட்டணத்தை பெறாமல், இலவசமாக, பொது நன்மைக்காக வாதாடும் முறையில், கோலா பலருக்காக வாதாடி வருகிறார்.

மத உணர்வுகளை புண்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டு, கடும் தண்டனை பெற இருந்த பலரின் சார்பாக கோலா வாதாடி, அவர்களை கடும் தண்டனையிலிருந்து காப்பாற்றியுள்ளார். ஷரியா சட்டப்படி குற்றம் இழைத்ததாக கருதப்பட்டு தண்டனைக்குள்ளாகும் பல ஏழை எளிய மக்களுக்கு கோலா சட்ட ஆலோசனையையும், உதவியையும் வழங்கி வருகிறார். இவரது உயிருக்கு எதிராக பல அச்சுறுத்தல்கள் இருந்து வருகிறது.

மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த யஹாயா ஷரீஃப்-அமினு எனும் பாடகரின் சார்பில் கோலா வாதாடியதால் அவர் தண்டனையிலிருந்து தப்பும் வாய்ப்பு உருவாகி உள்ளது. கோலாவின் திறமையால் பல வருடங்கள் சிறை தண்டனை பெற இருந்த 13 வயது சிறுவன் ஒருவனுக்கு தண்டனை ரத்தானது. கோலாவின் சேவையை கவுரவிக்கும் விதமாக அமெரிக்க அரசு சர்வதேச மத சுதந்திர விருது எனும் உயரிய விருதை வழங்கியுள்ளது.

இது குறித்து கோலா தெரிவித்ததாவது: வாழ்வா, சாவா எனும் ஆபத்தான நிலையில் உள்ள பலருக்கு எங்கள் பணி மெல்லிய நம்பிக்கையை தருகிறது. எப்போது வேண்டுமானாலும் அடிப்படைவாத கும்பலால் தாக்குதலுக்கு உள்ளாகும் ஆபத்து எங்களுக்கு உள்ளது. 2015ல் ஒரு கும்பல் காவல் நிலையத்தையும் நீதிமன்ற அறையையும் தீ வைத்து எரித்தது. எனது பல வருட போராட்டங்களுக்கான அங்கீகாரமாக இந்த விருதை கருதுகிறேன் என்று கோலா கூறினார்.

# சோமாலியாவில் கூட்டுப்போர் பயிற்சியின்போது பயங்கரவாதிகள் தாக்குதல் – 4 ராணுவ வீரர்கள் பலி




**மொகாதிசு : பிப். 13,**

**இந்த தாக்குதலுக்கு அல்-ஷபாப் பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.**

உள்நாட்டு கலவரத்தால் பாதிக்கப்பட்டுள்ள சோமாலியாவில் பல்வேறு பயங்கரவாத குழுக்கள் செயல்படுகின்றன. இவர்கள் அப்பாவி பொதுமக்கள் மீதும் தாக்குதலை நடத்தி அரசாங்கத்துக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளனர். எனவே இவர்களை ஒடுக்க ராணுவம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

அதன் ஒருபகுதியாக ஐக்கிய அரபு அமீரகம், பஹ்ரைன் ஆகியநாடுகளுடன் இணைந்து சோமாலியா கூட்டுப்போர் பயிற்சியை நடத்தியது. தலைநகர் மொகாதிசுவில் உள்ள ராணுவதளத்தில் இந்த பயிற்சி நடைபெற்றது. அப்போது மர்ம நபர்கள் சிலர் அங்கு தாக்குதல் நடத்தினர். இதில் ஐக்கிய அரபு அமீரகத்தின் 3 ராணுவவீரர்கள் மற்றும் ஒரு பஹ்ரைன் ராணுவ வீரர் என 4 பேர் உயிரிழந்தனர். இந்த தாக்குதலுக்கு அல்-ஷபாப் பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

# தாயின் கவனக்குறைவால் கைக்குழந்தை பலியான சோகம்



**வாஷிங்டன் : பிப். 13,**

**தொட்டிலில் படுக்கவைப்பதாக நினைத்து குழந்தையை மைக்ரோவேவ் ஓவனில் வைத்து கொன்ற தாயை போலீசார் கைது செய்தனர்.**

அமெரிக்காவின் மிசோரி மாகாணம் கன்சஸ் நகரை சேர்ந்தவர் மரிகா தாமஸ் (வயது 26). இவருக்கு ஒருமாத பெண் குழந்தை உள்ளது. இந்நிலையில், மரிகா தாமஸ் தனது குழந்தையை தொட்டிலில் தூங்கவைப்பதாக நினைத்து உணவை சூடுபடுத்த பயன்படும் மைக்ரோவேவ் ஓவனில் வைத்துள்ளார்.

மைக்ரோவேவ் ஓவன் செயல்பட்டுக்கொண்டிருந்த நிலையில் குழந்தையின் ஆடை மற்றும் குழந்தையை சுற்றிவைக்கப்பட்டிருந்த துணி வெப்பத்தால் கருகி எரிந்த புகை வாசனை வந்துள்ளது. எரிந்த புகை வாசனை வருவது குறித்து அக்கம்பக்கத்தினர் போலீசாருக்கு தகவல் கொடுத்துள்ளனர். தகவலறிந்து விரைந்து வந்த போலீசார், வீட்டின் மைக்கோவேவ் ஓவனில் படுகாயங்களுடன் குழந்தை இருந்ததை கண்டு அதிர்ச்சியடைந்தனர். உடனடியாக குழந்தையை பரிசோதித்தனர். ஆனால், குழந்தை ஏற்கனவே உயிரிழந்துவிட்டது.

இந்த சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்த போலீசார் குழந்தையின் தாயான மரிகா தாமசை கைது செய்து சிறையில் அடைத்தனர். முதற்கட்ட விசாரணையில் மரிகா தாமஸ் மனநலம் பாதிக்கபப்ட்டவர் என தெரியவந்துள்ளது. தொட்டிலில் தூங்கவைப்பதாக நினைத்து பெற்ற தாயே குழந்தையை மைக்ரோவேவ் ஓவனில் வைத்து கொன்ற சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# சபாநாயகரின் அநாகரிக செயலால் ஆளுநர் ஆர்.என்.ரவி வெளிநடப்பு: ராஜ்பவன் விளக்கம்





# ஜோதிமணி மீண்டும் போட்டியிட கரூர் காங்கிரஸ் நிர்வாகிகள் ரத்தத்தில் கடிதம் எழுதி எதிர்ப்பு

# மத்திய அரசில் ஆள்சேர்ப்பு முறை முற்றிலும் வெளிப்படை ஆனதாக மாறிவிட்டது



சென்னை / புதுக்கோட்டை | 13.02.2024 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

13.02.2024 செவ்வாய்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

மிர்சா குலாம் அகமது , இந்திய மதத் தலைவர் (பி.1835) (இ.1908)



சரோஜினி நாயுடு , இந்தியக் கவிஞர், செயற்பாட்டாளர் (பி.1879) (இ.1949)



எம். ஒய். இக்பால் , சென்னை உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி (பி.1951) (இ.2021)



## இன்றைய நினைவு நாள்

செய்குத்தம்பி பாவலர் , தமிழகத் தமிழறிஞர் (பி.1874) (இ.1950)



எம். பக்தவத்சலம் , தமிழக முன்னாள் முதலமைச்சர், அரசியல்வாதி (பி.1897) (இ.1987)



ஏ. நடராஜன் , தமிழக எழுத்தாளர் (பி.1938) (இ.2016)



## உலக வானொலி நாள்